www.padippkam.com



பொதுமையர் தமது கருத்துகளையும் நோக்கங்களையும் மூடி மறைப்பதை இழிவாகக் கருதுகிறார்கள். இன்றைய குமுகாய நிலைமைகள் அனைத்தையும் தாக்கித் தகர்த்தெறிவதன் மூலம் மட்டுமே தமது இறுதி இலக்கை அடைய முடியும் என்று அவர்கள் வெளிப்படையாக அறிவிக்கை செய்கிறார்கள். பொதுமைப் புரட்சியைக் கண்டு ஆளும் வகுப்புகள் நடுநடுங்கட்டும். பாட்டாளிகளுக்கு அடிமைத் தளை களைத் தவிர இழப்பதற்கு வேறெதுவும் இல்லை. அவர்கள் வென்று பெறுவதற்கோ ஓர் உலகம் இருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

மார்க்ஸ் ஏங்கல்ஸ்

படையால் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், போரால் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதும் புரட்சியின் நடுவண் கடமையும் மிக்குயர் வடிவமும் ஆகும். புரட்சி பற்றிய இந்த மார்க்சிய - லெனினியக் கோட்பாடு சீனத்திற்கு மட்டுமின்றி அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடியதாகும்.

மாவோ

# கட்சித் திட்டம்

(வரைவு)

தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# கட்சித் திட்டம்

(வரைவு)

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

மூன்றாம் பதிப்பு : சூன் 2012

விலை : ரூ. 25

உட்கட்சிக் கலந்தாய்வுக்குப்பின் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் நடுவண் அமைப்புக் குழுவில் மே 1994-இல் நிறைவேற்றப்பட்டது.

# கட்சித் திட்டம்

(வரைவு)

★ தமிழகம் - வன்குடியாதலும், முதலாளியத்தின் தோற்றமும்

★ இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் தோற்றம்

★ தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தில் அரசியலும் பொருளியலும்

★ அடிமைத் தமிழகத்தில் அரசியலும் பொருளியலும்

★ அடிப்படை, முதன்மை முரண்பாடுகளும் தேசிய விடுதலைப் புரட்சியும்

★ தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகள்

★ தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

www.padippkam.com

# கட்சித் திட்டம்

(வரைவு)

## தமிழகம்
## ஆங்கிலேயர்களின் வன்குடியாக்கப்படுவதும் முதலாளியத்தின் தோற்றமும்

1. அன்பிற்குரிய நமது தாய்நாடான தமிழ்நாடு தனக்கென தனித்ததொரு நீண்ட வரலாற்றையும் தொன்மைச் சிறப்பையும் கொண்டது. புகழ்மிக்க போராட்ட மரபுகளையும் தொன்மை சான்ற பண்பாட்டு மரபுகளையும் கொண்டது. கடும் உழைப்பும் திறமையும் கொண்ட ஆறு கோடி மக்களைக் கொண்டது. உழவர் பெருங்குடி மக்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு வேளாண் நாடு நமது தாய்த் தமிழ்நாடு. நம் மக்கள் விடுதலையை நேசிப்பவர்கள். தன்னாட்சி, தற்சார்பு வேட்கை கொண்ட மிகப் பழமையான தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். வல்லாண்மை ஆற்றல்களுக்கும் பிற்போக்கு ஆற்றல்களுக்கும் எதிராக தொடர்ந்த போராட்டத்தில் தமது வரலாற்றை நிலைநிறுத்திக் கொண்டுள்ள பெருமைசான்றவர்கள்.

2. பெருமைமிகு நமது தாய்த் தமிழ்நாட்டை தேசிய ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை எனும் இரட்டை ஒடுக்குமுறை முகங்களைக் கொண்ட பார்ப்பனியம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே அடிமை கொள்ளத் தொடங்கியது. அது தமிழர்களை சூத்திரர்கள் என்றும், பார்ப்பனர்களை தேவர்கள் என்றும், தமிழ் மொழியை சூத்திர மொழி என்றும், சமக்கிருத மொழியை தேவ மொழி என்றும் தமிழையும் தமிழரையும் இழிவுபடுத்தியது. கல்வி, ஆட்சி, இறை வழிபாடு மற்றும் கலை, இலக்கிய, பண்பாட்டுத் துறைகளில் சமக்கிருதத்தை புகுத்தும் இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு, அதில் பெருமளவில் வெற்றியும் பெற்றது. இதன்மூலம் தமிழகத்திலேயே தமிழர்களை இரண்டாம்நிலைக் குடிமக்களாக்கியது. தமிழ் மக்களிடம் நிலவிய தொழில் பிரிவுகளைச் சாதிப் பிளவுகளாக மாற்றி, அவர்களிடையே பிறவியிலேயே படிநிலை ஏற்றத் தாழ்வுகளைப் புகுத்தியும்: ஒரு பகுதி உழைக்கும் தமிழ் மக்களை தீண்டத்தகாதவர்களாக்கியும் ஒடுக்கியது. இவ்வஞ்சனைகளுக்கு

படிப்பகம்

www.padippkam.com



நிலக்கிழாரிய மன்னர்களும் உடன்பட்டு பார்ப்பனியத்திற்கு முழுப் பாதுகாப்பும் அளித்து வந்தனர்.

3. சாதி அமைப்பால் தமிழக நிலக்கிழாரிய குமுகாயம் அய்ரோப்பிய வகைப்பட்டதிலிருந்து மாறுபட்டிருந்தது. தமிழக நிலக்கிழாரிய குமுகாயத்தில் வகுப்புப் பகுப்பு சாதியப் பகுப்பாகவும் இருந்தது. வல்லாண்மை வகுப்பினர் ஒடுக்கும் மேல்தட்டு சாதியினராகவும் உழைக்கும் மக்கள் ஒடுக்கப்படும் கீழ்த்தட்டு சாதியினராகவும் இருந்தனர். இதனால் இங்கு நிலக்கிழாரிய குமுகாய அமைப்பு என்பது, சாதிய நிலக்கிழாரிய அமைப்பாகவும் இருந்தது; இங்கு உழைக்கும் மக்கள் வகுப்பு ஒடுக்குமுறைக்கு மட்டுமின்றி தேசிய மற்றும் சாதிய ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி இருந்தனர். தமிழக நிலக்கிழாரிய அமைப்பில் கட்டற்ற தொழிலாளர்களும் கைவினைஞர்களும் தொழில் பழகுவோரும் தோன்றுவதற்கு சாதியம் ஒரு பிறவித் தடையை எழுப்பியது. இதனால், இங்கு முதலாளியம் தோன்றுவது தடுக்கப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பல நூற்றாண்டுகளாக தமிழ்க் குமுகாயம் நிலக்கிழாரிய குமுகாயமாகவே தேக்கமுற்றிருந்தது.

4. நிலக்கிழாரிய தமிழ்க் குமுகாயம் அடுத்தடுத்து வெவ்வேறு அயலவர் படையெடுப்புக்கு உட்பட்டிருக்கிறது. அதில் இறுதியாக வந்தவர்களே ஆங்கிலேயர்கள். அவர்கள் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலக்கிழாரிய மன்னர்களின் ஆதரவுடன் கிழக்கிந்திய வணிகக் குழுமங்களை அமைத்துக்கொண்டு கீழ்த்திசை நாடுகளில் தமது வணிக நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். இவர்களுடன் டச்சு, பிரெஞ்சு வன்குடியர்களும் கிழக்கிந்திய வணிகக் குழுமங்களை அமைத்துக் கொண்டு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர்கள் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் தமது போட்டி கிழக்கிந்திய வணிகக் குழுமங்களையும் உள்நாட்டு நிலக்கிழாரிய மன்னர்களையும் முற்றாக வீழ்த்தி அடிமைப்படுத்தி தமிழகத்தின் பெரும்பகுதியை தமது முழு வன்குடியாக்கிக் கொண்டனர்.

5. தமிழகம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேயர்கள் தமிழகத்தில் ஏற்கனவே இருந்த நிலவுடைமை முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தி 'ஜமீன்தாரி', 'இரயத்வாரி' முறைகளையும், பணப் பயிரிடும் முறைகளையும் புகுத்தினர். இதன்மூலம் தமிழக நிலக்கிழாரிய வகுப்புகளை தமது வல்லாண்மை நலன்களுக்குச் சேவை செய்யும்படியாக மாற்றி அமைத்தனர். வணிக வகுப்புகளிலிருந்து தமது அடிவருடிகளாலான தரகு வகுப்பை



உருவாக்கினர். தமிழகத்தில் உருவான தரகு வகுப்பினரும் அவர்களுடன் வட இந்தியாவில் உருவான பார்சி, மார்வாரி, பனியா தரகு வகுப்பினரும் தமிழகத்தில் தமது வங்கி, வட்டி, வணிக தரகுத் தொழில் நிறுவனங்கள் மூலம் பெருமளவில் செல்வம் குவித்தனர்.

6. தொழிற்புரட்சிக்குப் பின் தமது ஆலைப் பொருட்களை இங்கு விற்று ஊதியம் ஈட்டி வந்த ஆங்கிலேய வல்லரசியர்கள் மக்களின் உழைப்பு ஆற்றலைச் சுரண்டும் நோக்கத்துடன் இங்கேயே தொழில்களில் முதலீடு செய்யத் தொடங்கினர். ஆங்கிலேய நாட்டின் ஆலைகளுக்கு மூலப் பொருள்களைச் சேர்த்து அனுப்பியும் அந் நாட்டின் ஆலைப் பொருள்களை இங்கு விற்றும் ஊதியம் ஈட்டிவந்த தரகர்களும் பின்னர் வல்லரசியத்தைச் சார்ந்தும் சேர்ந்தும் நின்று இந்நாட்டிலேயே ஆலைத் தொழிலில் இறங்கினர். இவர்களுடன் செல்வம் படைத்த நிலவுடைமையாளர்களும் வட்டி - வங்கியாளர் களும் அதிகார வகுப்பினரும் வல்லரசியங்களைச் சார்ந்து நின்று ஆலைத் தொழிலில் இறங்கினர். இப்படித்தான் இங்கு முதன்முதலாக முதலாளி வகுப்பு தோன்றியது.

7. தமிழகத்தில் முதலாளி வகுப்பு தோன்றிய முறை அய்ரோப்பிய நாடுகளில் தோன்றிய முறையிலிருந்து வேறுபட்ட தாகும். முதலாளியப் புரட்சி நடைபெற்ற அய்ரோப்பிய நாடுகளில் பட்டறை உற்பத்தியாளர்கள், அதன் உரிமையாளர்கள், தொழில் பழகுவோர், கட்டற்ற கைவினைஞர்கள், தொழிற் பொருள் வணிகர்கள் ஆகியோரிடமிருந்து தோன்றியது முதலாளி வகுப்பு. அது புரட்சியின் மூலம் நிலக்கிழாரிய வகுப்பை முற்றாக வீழ்த்தி விட்டு அதன் அழிவுக் குவியல்மேல் முதலாளிய தேசிய அரசை அமைத்தது. ஆனால் நமது நாட்டில் அதன் தோற்றம் தரகர்களிட மிருந்தும், நிலக்கிழார்களிடமிருந்தும் அமைந்தது. அது வல்லரசியத் தைச் சார்ந்ததாகவும் நிலக்கிழாரிய வகுப்புடன் ஒப்பிச் செல்வதாகவும் இயல்பாகவே வல்லாண்மை சாதியைச் சேர்ந்ததாகவும் இருந்தது. பிறவியிலேயே தரகுத்தன்மை கொண்டிருந்த இந்த வகுப்பு தேசியத் தன்மை அற்றதாகவும், பிற்போக்கானதாகவும் இருந்தது.

8. வல்லரசியர்களால் மேலிருந்து திணிக்கப்பட்டும் அதைச் சார்ந்தும் இங்கு தோன்றிய முதலாளியத்தால் இங்கு நிலக்கிழாரிய அமைப்போ சாதிய ஒடுக்குமுறை அமைப்போ முற்றிலும் ஒழிய வில்லை. எனினும் அதன் இறுக்கத்தில் ஒரு தளர்ச்சியை ஏற்படுத் தியது. இதனால் ஆங்கிலேய வல்லாண்மையின் கீழான தமிழ்நாடு

படிப்பகம்

www.padippkam.com



ஒரு முழு வன்குடி நாடாக மட்டுமின்றி ஓர் அரைநிலக்கிழாரிய நாடாகவும் இருந்தது.

9. ஆங்கிலேய வல்லாண்மையின் கீழ் தமிழ்க் குமுகாயத்தின் சாதிய, நிலக்கிழாரிய அமைப்பில் ஏற்பட்ட தளர்வால் இங்கு சிறிய அளவிலான தேசிய முதலாளிய வகுப்பும் உருப்பெற்று வந்தது. ஆனால் அது மிகவும் சிறியதாகவும், பெரிதும் வலுவின்றியும் இருந்தது.

## ஆங்கிலேய வன்குடி வல்லாண்மையின்கீழ் அரசியல் இயக்கங்களும் இந்திய தரகு முதலாளிய - பார்ப்பனிய வல்லரசியத்தின் தோற்றமும்

10. தமிழகத்தை வன்குடியாக்கிக் கொண்ட ஆங்கிலேயர்கள் தமது வல்லாண்மைக்கு ஊழியம் செய்வதற்காக மெக்காலே கல்வி முறையையும், தொடர்வண்டி மற்றும் புதிய போக்குவரத்து நிலை களையும், செய்தித் தொடர்புகளையும் ஏற்படுத்தினர். அடிமைத் தனமான அறிவாளிகளையும், அதிகார வகுப்பினரையும் ஏற்படுத்திக் கொண்டதுடன் பல்வேறு பொருளியல், ஆட்சித்துறை நடவடிக்கைகள் மூலம் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு ஏற்ற முறையில் வன்குடி அதிகார வகுப்பு அரசு எந்திரத்தையும் படிப்படியாகக் கட்டிய மைத்தனர். கல்வி, ஆட்சித் துறைகள் அனைத்திலும், முற்றிலும் ஆங்கில வல்லாண்மையை நிறுவினர். ஆங்கிலப் பண்பாட்டின் வல்லாண்மையும் நிறுவப்பட்டது. வன்குடியர்களின் கல்வி, ஆட்சி அமைப்புகளின் பொறுப்புகளில் பெரும்பகுதியை ஆங்கிலேயருக்கு அடுத்தபடியாக பார்ப்பனர்களும், அவர்களை அடுத்து மேல்தட்டு சாதி அறிவாளிப் பகுதியினரும் பெற்றனர்.

11. சாதியத்தாலும், சமக்கிருதமயமாக்கத்தாலும் தேசிய உணர்வு குன்றியிருந்த தமிழகத்தை ஆங்கிலேய வன்குடியர்கள் அருகில் இருந்த கன்னட, தெலுங்கு, மலையாள பகுதிகளுடன் இணைத்து "சென்னை மாநிலம்" என்கிற ஒரே மாநில அமைப்பின் கீழாகக் கொண்டு வந்ததுடன் இதே போன்று பம்பாய், கல்கத்தா மாநில அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றையும் தமக்குக் கீழான ஒரே வன்குடி ஆட்சி அமைப்பின் கீழ் கொண்டு வந்தனர். இவ்வாறு இந்திய வன்குடி 'தேசத்தை'–இந்திய 'நாட்டை' ஆங்கிலேய வல்லரசியர்கள் உருவாக்கினர்.



12. அய்ரோப்பிய ஆங்கிலேயர்கள் வன்குடியாட்சியை நிறுவிக் கொண்டதிலிருந்து இம்மண்ணின் வரலாறு வன்குடி வல்லாண்மைக்கு எதிராக மக்கள் நடத்திய வீரமிக்க போராட்டங்களின் வரலாறாகவே அமைந்தது. வல்லரசியர்கள் வீரமிக்க மக்கள் போராட்டங்களை ஒடுக்க ஒருபுறம் கடுமையான அடக்குமுறைகளை ஏவிவிட்டுக் கொண்டே, மறுபுறம் போராட்டங்களைத் திசைதிருப்பிவிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். உள்ளூர் அமைச்சரவைகள், சட்டமன்றங்கள், வாரியங்கள், உள்ளூர் நகராட்சி-ஊராட்சி அமைப்புகள் போன்ற சொத்துப் படைத்த வகுப்புகளின் பகராளி அமைப்புகளை நிறுவுவது, சீர்திருத்த ஆணையகங்களை அமைப்பது, சில சீர்திருத்தங்களையும் வசதிகளையும் அறிவிப்பது, பேச்சு நடத்துவது போன்ற முறைகளைப் பின்பற்றினர்.

13. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அனைத்திந்திய அளவில் இருந்த தரகு முதலாளிய - நிலக்கிழாரிய ஆற்றல்கள் ஒன்றிணைந்து தமக்கான அரசியல் கட்சியாக இந்திய தேசிய பேராயக் கட்சி என்ற ஓர் அமைப்பை ஆங்கிலேய வல்லரசியத்தின் ஆதரவுடன் தோற்றுவித்தனர். வீறுகொண்டு எழுந்த வல்லரசிய எதிர்ப்பு மக்கள் போராட்டங்களை முனைமழுங்கச் செய்யவும், அவற்றைத் தமக்கு ஆதரவாக மாற்றிக் கொள்ளவும் இத்தகையதொரு அமைப்பு இன்றியமையாதது என்பதை வல்லரசியர்கள் உணர்ந்திருந்தனர். இவ்வமைப்பின் கிளை தமிழகத்திலும் ஏற்படுத்தப்பட்டது.

14. இந்திய தேசிய பேராயக் கட்சி இந்தியத் தேசியத்துக்கு இந்துப் பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் கட்சியாகும். எனவே இயல்பாகவே பார்ப்பனிய ஆற்றல்கள் இவ் வமைப்பின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கு கொண்டனர். உண்மையில் இந்திய தேசிய பேராயக் கட்சி என்பது வல்லரசிய சார்பு தரகு முதலாளிய, நிலக்கிழாரிய, பார்ப் பனிய ஆற்றல்களின் அரசியல் கூட்டமைப்பாகவே உருவாகியது.

15. தொடக்கத்தில் இந்திய தேசிய பேராயக் கட்சி வல்லரசியத்திற்கு வெளிப்படையாகவே வாழ்த்துப் பாடுகின்ற மேல்தட்டு வகுப்பு, சாதியினரிடம் மட்டுமே இருந்தது. மோ.க.காந்தி தலைமையிலேயே அது முதன்முதலாக ஒரு வெகுமக்கள் இயக்கமாக மாறியது. 'துன்புறுத்தாமை', 'அமைதி வழி' ஆகிய முழக்கங்களால் அவர் வல்லரசிய எதிர்ப்பு இயக்கங்களில் நூறாயிரக் கணக்கில் திரண்ட மக்களின் போர்க்குணத்தை முனைமழுங்கச் செய்து ஒப்பிச் செல்வதற்கு இட்டுச் சென்றார். அந்த வகையில்

படிப்பகம்

www.padippkam.com



அவர் தரகு முதலாளிய, நிலக்கிழாரிய, பார்ப்பனிய ஆற்றல்களின் மிகப் பொருத்தமான தலைவராகவே விளங்கினார்.

16. இந்திய தேசிய பேராயக்கட்சி இந்துப் பார்ப்பனிய தேசியத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதால் இஸ்லாமிய தரகு முதலாளிய, நிலக்கிழாரிய ஆற்றல்கள் முஸ்லீம் லீக் என்றொரு தனி அரசியல் கட்சியை அமைத்துக் கொண்டனர். அதேபோல் தமிழ்நாட்டில் பார்ப்பனிய எதிர்ப்பு தரகு முதலாளிய, நிலக்கிழாரிய ஆற்றல்கள் தமக்கென்று தனி அரசியல் கட்சியாக நயன்மைக் கட்சியை அமைத்தனர். இடஒதுக்கீடு இதன்தலையாயக் கொள்கையாக இருந்தது. ஆங்கிலேயரின் வன்குடியாட்சியிலும், அதற்கு முன்னரும் பார்ப்பனர்கள் தொடர்ந்து குமுக, அரசியல் வல்லாண்மை சாதியினராக இருந்து வந்ததால் அவர்களுக்கு எதிராக பார்ப்பன ரல்லாதார் இயக்கம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையுடன் வலுவாகத் தோன்றியது. பேராயக் கட்சியின் பார்ப்பனியச் சார்பின் காரணமாக பார்ப்பனியத்தின் மிகக் கொடிய ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக அம்பேத்கார் முதலானோரின் இயக்கங்களும் தோன்றின. பார்ப்பனரல்லாதாரிலேயே நிலவிய சாதிய வல்லாண்மையின் காரணமாகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்த இயக்கங்களும், தலைவர்களும் தோன்றினர். எவ்வாறாயினும் பார்ப்பனரல்லாதார் இயக்கம் அனைத்தும் இட ஒதுக்கீடு மற்றும் சில அரசியல் - குமுகாயச் சீர்திருத்த, பாராளுமன்ற கொள்கைகளுக்கு மேல் செல்லவில்லை. எப்போதுமே வல்லரசிய, நிலக்கிழாரிய எதிர்ப்பு அவற்றின் அடிப்படைக் கொள்கையாக இல்லை. நயன்மைக் கட்சியிலிருந்து பெரியார் தலைமையில் தோன்றிய திராவிடர் கழகம் 'பகுத்தறிவு', 'தன்மானம்', 'தன்மதிப்பு' மற்றும் பல குமுகாய சீர்திருத்தக் கொள்கைகளையும் சேர்த்துக் கொண்ட போது கூட அது வல்லரசிய எதிர்ப்பு, நிலக்கிழாரிய எதிர்ப்பு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. 1940களில் இக்கட்சி 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கத்தை எழுப்பியது, ஆனால் அதில் தொடர்ந்து ஊன்றி நிற்கவில்லை. மொழித் துறையில் சமக்கிருத-ஆங்கில வல்லாண்மையை உறுதியாக எதிர்த்த தனித்தமிழ் இயக்கமும் வல்லரசியஎதிர்ப்பு, நிலக்கிழாரிய எதிர்ப்பு கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

17. மாபெரும் அக்டோபர் நிகரமையப் புரட்சி கீழை நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. அது நமது நாட்டிற்கும் மார்க்சிய-லெனினியத்தைக் கொண்டுவந்தது. ஆனால் தமிழ் நாட்டின் பொதுமையர்கள், தமிழ்ப் பாட்டாளி வகுப்பிற்கு தனித்ததொரு கட்சியைக் கட்டுவதற்கு மாறாக, இந்தியத் தேசியத்தை அடிப்படை யாகக் கொண்ட இந்தியப் பொதுமைக் கட்சியில் இணைந்தனர். இதனால் பாட்டாளி வகுப்பின் தலைமையிலான தேசிய விடுதலைப் புரட்சி நிகழ்ச்சி நிரலுக்கே வரவில்லை. 1930-40களில் தேசம், தேசிய இனம் குறித்த சரியான மார்க்சியப் புரிதலைப் பொதுமையர்கள் முதன்முதலாகப் பெற்றபோதும்கூட இந்தியத் தேசம் என்கிற வல்லரசிய பொருளியத்திலிருந்து விடுபடாததால் தொடர்ந்தும் தேசிய விடுதலைப் புரட்சிக்குத் தலைமையளிக்க இயலாதவர்களானார்கள்.



18. இரண்டாவது உலகப் போர் காலகட்டத்தில் மாபெரும் தலைவர் ஸ்டாலின் தலைமையில் சோவியத் மக்கள் உலகக் கொடு நெறியை முறியடித்தார்கள். மாவோ தலைமையில் சீனம் வெற்றியின் இறுதிப் படியில் இருந்தது. கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மக்கள் குடிநாயக அரசுகள் அமைந்தன. வன்குடி நாடுகளில் வல்லரசிய எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. இந்தியத் துணைக் கண்டத்திலும் வல்லரசிய எதிர்ப்புப் போராட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீறுடன் எழுந்து கொண்டிருந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஆங்கிலேய வல்லரசியம் வீழ்ச்சியுறும் வல்லரசியமாகவும், அமெரிக்க வல்லரசியம் முன்னணிக்கு வரும் வல்லரசியமாகவும் இருந்தன. அமெரிக்க வல்லரசியம் தனது சந்தை நலன்களுக்காக வன்குடி நாடுகளிலிருந்து வெளியேறும்படி ஆங்கிலேய வல்லரசியத்திற்கு வல்லந்தம் கொடுத்து வந்தது.

19 உலகப் பாட்டாளி வகுப்பு இயக்கத்தின் வளர்ச்சி, தேசிய விடுதலை இயக்கங்களுக்கு அதன் ஆதரவு, ஆங்கிலேய வல்லரசியத்தின் வலிமைச் சிதைவு, அதற்கெதிரான மக்களின் எழுச்சிமிக்க போராட்டங்கள் மற்றும் அமெரிக்க வல்லரசியத்தின் வல்லந்தம் ஆகியவற்றின் காரணமாக ஆங்கிலேய வல்லரசியம் இனியும் தொடர்ந்து இந்தியத் துணைக்கண்டத்தில் தனது வன்குடி வல்லாண்மையைப் பழைய முறையில் தொடர முடியாது என்ற நிலையை அடைந்தது.

20. இதனால் ஆங்கிலேய வல்லரசியம் தனது முதலீட்டுச் சுரண்டல் நலனைப் பாதுகாக்கும் உறுதியுடன் 1947-இல் வன்குடி இந்தியாவை இந்தியா, பாகிஸ்தான் என இரு பிரிவுகளாக்கி அரசியல் அதிகாரத்தை இந்திய தேசிய பேராயக் கட்சித் தலைமையின் கைகளுக்கும் முஸ்லீம் லீக் தலைமையின்

படிப்பகம்

www.padippkam.com



கைகளுக்கும் தனித் தனியே பிரித்து மாற்றிக் கொடுத்தது. இதையே புதிய ஆளும் வகுப்புகள் தன்னாட்சி என அறிவித்தன.

21. ஆனால் 1947-இல் நடைபெற்ற அதிகார மாற்றம் உண்மையில் எந்தவகை தன்னாட்சியையும் குறிக்கவில்லை; ஆங்கிலேய வல்லரசியத்தின் நேரடி வன்குடியாக இருந்த இந்தியா ஒரு தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியமாக மாறியதையே குறித்தது. காரணம், அதிகார மாற்றத்தால் புதிதாக அதிகாரம் பெற்ற ஆட்சியாளர்கள் இந்துப் பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியத் தேசியத்தின் பெயரால் இந்தியாவில் இருக்கும் தேசிய இனங்கள்-நாடுகள் அனைத்தையும் ஒடுக்கும் வல்லரசியர்களாகவே செயல்படுகிறார்கள். அவர்கள் தரகு முதலாளிய, நிலக்கிழாரிய வகுப்புகளின் நலனையும், வல்லரசியர் களின் புதுவன்குடி வல்லாண்மை நலனையும் முரணற்ற வகையில் பாதுகாக்கின்றவர்களாக இருக்கிறார்கள். வன்குடி காலத்தில் மக்களை ஒடுக்குவதற்காகவே ஆங்கிலேய வல்லரசியர்களால் கட்டமைக் கப்பட்ட அரசியல் அமைப்பைக் கூட அடிப்படை மாற்றம் எதுவும் இன்றி அப்படியே அவர்கள் கட்டிக் காத்து வளர்த்து வருகிறார்கள்.

22. எனவே 1947-இல் நடைபெற்ற அதிகார மாற்றத்தால் தமிழ்நாடும் எவ்வகையான விடுதலையோ, தன்னாட்சியோ பெறவில்லை. மாறாக, இந்திய தரகு முதலாளிய - பார்ப்பனிய வல்லரசியத்தின் கீழ் ஓர் அடிமை நாடாகவே தொடர்கிறது.

## தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசியத்தில் அரசியலும் பொருளியலும்

23. இரண்டாவது உலகப் போருக்குப் பின் வல்லரசியங்கள் தமது அரசியல் பொருளியல் வல்லாண்மையைப் பெரிதும் புதிய வன்குடி முறையிலேயே மேற்கொண்டு வருகின்றன. அரசியல் தன்னாட்சியை பெயரளவில் ஒப்புக் கொள்வது, ஆனால் தமது தரகு வகுப்புகள் துணையுடன் அந்நாடுகளில் தொங்குசதை தரகு பொருளியலைக் கட்டமைப்பதும் அதன்மூலம் தமது அரசியல், பொருளியல் வல்லாண்மையை முழுஅளவில் வேறு வடிவங்களில் தொடர்வதும்தான் புதிய வன்குடி கொள்கையாக இருக்கிறது. இதில் பன்னாட்டு நிதியம், உலக வங்கி, ஒற்றுமை நாடுகள் பேரவை, காப்பு வரி வணிக பொது ஒப்பந்த அமைப்பு போன்ற உலக நிதி, வணிக, அரசியல் அமைப்புகளையும், உள்நாட்டு ஆளும் தரகு



வகுப்புகளையும் முன்னிறுத்தி தமது கொடிய முகங்களை வல்லரசியர்கள் மறைத்துக் கொள்கிறார்கள்.

24. 1947-இல் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட அதிகார மாற்றத்தால் இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்கள் பெற்ற அதிகாரம் வன்குடி வல்லாண்மைக்கு முடிவுகட்டவில்லை. மாறாக, வல்லரசியர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் தமது புதிய வன்குடி வல்லாண்மையைத் தொடர்வதற்கு உதவுவதாகவே அமைந்தது. அதிகாரமாற்றத்திற்குப் பின் ஆங்கிலேய வல்லரசியர்கள் மட்டும் இன்றி அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், ரஷ்யா போன்ற எண்ணற்ற வல்லரசியர்கள் இந்தியத் துணைக்கண்டத்து மக்களை தரகு முதலாளிய-பார்ப்பனிய அரசு மூலம் கொள்ளை யிட்டுச் செல்கின்றனர். அதற்கான எண்ணற்ற ஒப்பந்தங்கள் தரகு முதலாளிய-பார்ப்பனிய அரசால் வல்லரசியங்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளன. நேரடி முதலீடு, கடன் உதவி, தொழில்நுட்ப உதவி, படைக்கல உதவி, எந்திரக் கருவிகள் உதவி, ஏற்றத்தாழ்வான வணிக ஒப்பந்தங்கள் இப்படிப் பலவாறாக வல்லரசியர்கள் உதவி எனும் பெயரில் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசு மூலம் ஒவ்வோர் ஆண்டும் கோடிகோடியாய் கொள்ளையடித்துச் செல்கின்றனர். வல்லரசியங்கள் தமது புதுவன்குடி சுரண்டல், கொள்ளையை தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற்காகப் பொருளியல் அரங்கில் தமது தரகு வகுப்பை உருவாக்கிக் கொண்டிருப்பதைப் போல அரசியல் பண்பாட்டு அரங்கிலும் தமக்கு ஆதரவான ஆற்றல் களை உருவாக்கிக் கொண்டுள்ளன. அரசியல் கட்சிகள், அமைச்சர வைகள், அரசு படை, அதிகார வகுப்புகள், செய்தி, பண்பாடு, கல்வித் துறை நிறுவனங்கள், அறிவாளிகள் ஆகியோரிடையே தமது முகவர் களையும், ஒற்றர்களையும் அமர்த்திக் கொண்டுள்ளன. இவைமட்டு மின்றி 'தொண்டு' நிறுவனங்கள் மூலம் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றுவது குடிநாயகம், மாந்த உரிமை பற்றி தொடர்ந்து கூச்சலிடுவது போன்றவற்றின் மூலமும் பண்பாட்டுப் படையெடுப்பு மூலமும் மக்கள் நடுவில் தமக்குச் சார்பான சூழலை உருவாக்கும் முயற்சிகளையும் அவை மேற்கொண்டுள்ளன.

25. தொடக்கத்தில் தரகு முதலாளிய-பார்ப்பனிய அரசு வல்லரசிய எதிர்ப்பு, தன்னாட்சி, தற்சார்பு, தொழில்மயமாக்குதல் நிகரமையம் என்றெல்லாம் கொள்கை, குறிக்கோள்களை பேசி வந்திருக்கிறது. எனினும், அது எப்போதுமே வல்லரசியச் சார்பு, புதிய வன்குடி ஆதரவு கொள்கைகளையே பின்பற்றி வந்திருக்கிறது. இன்று அது வெளிப்படையாகவே உலகமயமாதல், தாராளமயமாதல், தனியார்

படிப்பகம்

www.padippkam.com



மயமாதல் என்ற பெயரில் புதுவன்குடி ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது.

26. நிகரமையக் கொள்கை எனும் பெயரில் அது அரசுத்துறை நிறுவனங்களைப் பெருமளவில் வளர்த்து வந்தது. தனியார் துறை தரகு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக அதிக முதலீடு தேவைப்படும் பெருந்தொழில் நிறுவனங்களையே அரசு துறையில் கட்டியது. இன்று அவை அனைத்தும் தாராளமயம், தனியார்மயம் என்ற பெயரில் பெரும் தரகு முதலாளிகளுக்கும் அயலக முதலாளி களுக்கும் மாற்றப்பட்டு வருகின்றன. உலகமயக் கொள்கை மூலம் கொள்கையளவில் கூட தற்சார்பு எதிர்க்கப்படுகிறது. அயலக முதலீட் டிற்கு எவ்வகையிலும் தடையற்ற வரவேற்பு அளிக்கப்படுகிறது.

27. சோவியத் ஒன்றியம் பெயரளவிலாவது ஒரு நிகரமைய நாடாக இருந்தவரை தற்சார்பு, நிகரமையம், கூட்டுச் சேராமை என்ற முழக்கங்களை இந்திய ஆளும் வகுப்புகள் பேசிவந்தன. அரசு துறையை நிகரமைய நிறுவனங்கள் போலவும், சில சட்டங்களை அயலக முதலீட்டுக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் போலவும் காட்டி வந்தன. சோவியத் ஒன்றியத்தின் முழுமையான வீழ்ச்சிக்குப் பின் அத்தகைய முகமூடிகளை எல்லாம் இந்திய ஆளும் வகுப்புகள் வீசி எறிந்துவிட்டன. ஏற்றுமதிக்கான விளைப்பு, அயலக முதலீட்டிற்கு முழு அளவிலான வரவேற்பு, இந்தியப் பொருளியலை வல்லரசியப் பொருளியலுடன் முழு அளவில் பிணைத்து அடிமைப்படுத்தும் உலகமயமாதல் கொள்கை ஆகியவற்றின் மூலம் தாம் நேரடியாகவே வல்லரசியங்களின் தரகர்கள்தாம் என்பதை இழிபெருமையுடன் வெளிப்படுத்திக் கொள்கின்றன. அவை வெட்கமற்ற முறையில் காப்புவரி வணிக பொது ஒப்பந்த அமைப்பின் புது வன்குடி டங்கல் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. புதிய உலக ஒழுங்கமைப்பு என்கிற அமெரிக்க வல்லரசியத்தின் உலக வல்லாண்மைத் திட்டத்தை மிகுந்த அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கும் இந்திய ஆளும் வகுப்புகள் பெயரளவிலான கூட்டுச் சேராக் கொள்கையைக்கூட பிணக்கிடங்கிற்கு அனுப்பிவிட்டன.

28. இந்திய ஆளும் வகுப்புகள் தமது புது வன்குடி ஆதரவுக் கொள்கையில் பெருமளவு தொழில் வளர்ச்சி ஏற்படும் என பீற்றிக் கொள்கின்றனர். ஆனால், உண்மையில் இதன்மூலம் வல்லரசியங் களின் காலங்கடந்த தொழில் நுட்பங்களும் விளைப்புக் கருவிகளும் சுற்றுச் சூழல் கேடுறும் தொழில்களும் நம் மக்களின் மீது சுமத்தப்படுகின்றன. வல்லரசியங்களின் உலகளாவிய தொழிற்



பிரிவினையால் நமது மக்களின் உழைப்பாற்றல் குறைந்த விலையில் சுரண்டப்படுவதற்கும் நாட்டின் வளங்கள் அனைத்தும் கொள்ளை யடிக்கப்படுவதற்கும் வழி செய்யப்படுகிறது. இதனால் இங்கு மிகுதியான வேலைவாய்ப்புகள் பறிபோகின்றன. நாளுக்குநாள் வேலையின்மையும் வேலைச்சுமையும் வேகமாக அதிகரித்து வருகின்றன. சுற்றுச்சூழல் கடுமையாகக் கெடுகிறது. உலகமயக் கொள்கையால் நிலைமை மேலும் சீர்கெட்டு வருகிறது.

29. முன்பு பசுமைப்புரட்சி என்ற பெயரில் வல்லரசிய நாடுகள் திணித்த திட்டத்தால் உரம், பூச்சி மருந்து, புதுமைக் கருவிகள் விளைப்பு-விற்பனையில் வல்லரசியர்கள் பெரும் கொள்ளையடித் தனர். கூடவே நாட்டின் மரபு வழியிலான உயரிய விதைகளும், வேளாண் சமநிலையும் அழிக்கப்பட்டன. மண் வளம் பெரும் அளவில் கெடுக்கப்பட்டதுடன் புதிய வேளாண் நோய்களுக்கும் மாந்த உடல் நலக் கேடுகளுக்கும் காரணமாயின.

30. இந்திய ஆளும் வகுப்புகள் மேற்கொண்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்களும் கூறிக்கொள்ளப்படும் முதலாளிய வகைப்பட்ட வேளாண்மை ஆதரவு நடவடிக்கைகளும் நிலக்கிழாரிய, சாதிய அமைப்பை முற்றாக ஒழிக்கவில்லை. மாறாக பெருநில உடைமை யாளர்கள் பெருஞ்செல்வம் படைத்த நிலவுடைமையாளர்களாகவும் வல்லரசிய சார்பு நிலவுடைமையாளர்களாகவும் மாறிக் கொள்வதற்கே உதவியுள்ளன. இதனால் அரை நிலக்கிழாரிய, சாதிய அமைப்பும், மிகப் பெரும்பான்மையான மக்கள் முதலாளியத்துக்கு முந்திய உறவுகளில் துயருறுவதும் அவர்கள் ஏதுமற்ற ஓட்டாண்டிகளாக மாறுவதும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. வல்லாண்மை வகுப்பினர் பெரிதும் மேல்தட்டு ஒடுக்கும் சாதியினராகவே இருப்பதும் தொடர்கிறது.

31. வல்லரசியத்தின் புதுவன்குடி முறையில் மேலிருந்து திணிக்கப்படும் தரகு பொருள் விளைப்பு முறை, குமுகாயத்தில் தொடர்ந்து நிலவும் அரைநிலக்கிழாரிய விளைப்பு உறவு இவற்றால் தரகு முதலாளிகள், நிலக்கிழாரிய ஆற்றல்கள், மேல்தட்டு வகுப்பு சாதியினர்–மொத்தத்தில் மிகச் சிறுபான்மையான தொகையினர் வளமான ஒட்டுண்ணி வாழ்வை மேற்கொண்டிருக்கும் அதே வேளையில் மிகப் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மையிலும், அறியாமையிலும் உழன்று வருகிறார்கள். சாதியக் கொடுமைகளும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தொடர்ந்த தாக்குதல்களும், பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும், குழந்தை உழைப்புச் சுரண்டலும்,

படிப்பகம்

www.padippkam.com



தொழிலாளி வகுப்பின் மீதான சுரண்டலும், ஒடுக்குமுறையும், உழவர் பெருங்குடி மக்களின் வாழ்நிலை வீழ்ச்சியும், கொத்தடிமைகளாக உழைப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன. கோடிக் கணக்கான இளைஞர்களின் உழைப்பாற்றல் வீணடிக்கப்படுகிறது. விலைகள் மக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு நேரெதிர் விழுக்காட்டில் வளர்ந்து வருகின்றன. இந்நாடு பத்து விழுக்காட்டினருக்கு 'சொர்க்க' மாகவும் 90 விழுக்காட்டினருக்கு 'நரக'மாகவும் மாற்றப்பட்டுள்ளது.

32. இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்கள் தொண்ணூறு விழுக்காடு மக்கள் மீதான தமது வல்லதிகார கொடு நெறித் தாக்குதலை மறைப்பதற்கான திரையாக போலி பாராளுமன்ற குடிநாயகத்தைப் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள். அதே நேரத்தில் மக்களை ஒடுக்குவதற்கான அதிகார வகுப்பு அரசு எந்திரத்தை அதன் படை, துணைப்படை அமைப்புகளுடன் மேலும் மேலும் பெரிய அளவில் புதிய ஏந்துகளுடன் வளர்த்து வருகிறார்கள். உலகின் மிகப் பெரிய குடிநாயக நாடு என்று பீற்றிக் கொள்ளப்படும் இந்தியப் பாராளுமன்ற குடிநாயக அமைப்பில் தரகுமுதலாளிகள், நிலக் கிழார்கள், கடத்தல் பேர்வழிகள், கள்ளச்சந்தைக்காரர்கள், மிகப்பெரிய ஊழல் பேர்வழிகள், சாதி, மத வெறியர்கள் இன்னும் பல்வேறு குமுகாய பகைவர்களுக்கும் மிகுந்த பாதுகாப்பு இருக்கிறது. அதே நேரத்தில் மக்கள் போராட்டங்களும், போராளிகளும் கொடுநெறி கறுப்புச் சட்டங்களால் மிகக் கொடிய முறையில் ஒடுக்கப்படுகின்றனர். மாந்த உரிமை மீறல்கள் அன்றாடச் செய்தியாய் இருக்கிறது. இந்திய பாராளுமன்ற, சட்டமன்ற அமைப்புகள் வெறும் அரட்டை மடங்கள் என்பதற்கு மேல் இந்திய ஆளும் வகுப்புகள் மீதான மக்கள் சினத்தைத் திசை திருப்புவதற்கான கருவிகளாகவும் செயல்படுகின்றன.

33. இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்கள் தமது அதிகாரத்தின் கீழ் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களுக்கும் தேசியத் தன்னாட்சி உரிமை–தேசியத் தன்நிலைத் தீர்வுரிமை– மறுத்து அவற்றை இந்தியத் தேசியம், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் அடக்கி ஒடுக்கிவரும் வல்லரசியர்களாக இருக்கிறார்கள். இந்துப்பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியத் தேசியத்தின் மொழியாக பார்ப்பனிய மொழியான சமக்கிருதத்தால் உருவாக்கப் பட்ட இந்தி மொழியை இந்தியா முழுமைக்குமான ஒரே தேசிய மொழி என்றும் தமிழ் உட்பட மற்ற மொழிகள் அனைத்தும் வட்டார மொழிகள் என்றும் அறிவித் திருக்கிறார்கள். தரகு முதலாளிய -பார்ப்பனிய ஆற்றல்கள் ஒருபுறம் இவ்வாறு வல்லரசியர்களாக இருக்கும்போதே இந்தியத் துணைக்



கண்ட வட்டகையில் அதன் நேரடி அதிகாரத்தில் இல்லாத நாடுகளை மிரட்டி தனக்குக் கீழ்படியச் செய்யும் விரிவாக்க வல்லாண்மைக் கொள்கையையும் பின்பற்றி வருகிறார்கள். மேலை வல்லரசியர்களின் புதுவன்குடி கொள்கையைச் செயல்படுத்தும் தரகர்களாக இருந்து கொண்டே இன்னொருபுறம் இந்தியத் துணைக்கண்டத்தில் வல்லரசிய. விரிவாக்க வல்லாண்மைக் கொள்கைகளையும் பின்பற்றி வருவதால் இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களின் அரசு ஒரு துணை வல்லரசு நிலை கொண்டதாகவும் இருக்கிறது.

34. தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசியர்கள், வல்லரசியப் பண்பாட்டையும் பார்ப்பனியப் பண்பாட்டையும் உயரிய பண்பாடாக மக்கள் நடுவில் பரப்பி வருகிறார்கள். வல்லரசியர்களின் கல்வி, பண்பாட்டு முறைகள் உயரிய அறிவியல் தன்மையும் குடிநாயகத் தன்மையும் பெற்றவை என்றும் பார்ப்பனிய கல்வி, பண்பாடு உயரிய இறைத்தன்மை பெற்றவை என்றும் உள்நாட்டின் தேசியகல்வி, பண் பாட்டு முறைகள் பண்பற்றவை, பிற்போக்கானவை என்றும் பரப்புரை செய்கின்றனர். கல்வி, பண்பாட்டு நிறுவனங்கள் அனைத்தும் வல்லரசிய, பார்ப்பனிய முறைகளால் நிரப்பப் பட்டுள்ளன. இந்தியத் தேசியப் பண்பாடு என்ற பெயரில் பார்ப்பனிய பண்பாட்டையும் 'வர்ணாசிரம தர்மத்தையும்' கற்பிக்கும் இந்துப்பார்ப்பனிய இலக்கியங் களும், நிறுவனங்களும் போற்றப் படுகின்றன, பரப்பப்படுகின்றன. இது மக்களிடையேயான சாதி - மத மோதல்களுக்கும் சிறுபான்மை மதப்பிரிவினரும் உழைக்கும் சாதிப் பிரிவினரும் தொடர்ந்து ஒடுக்கப்படுவதற்கும் தூண்டுதலாய் இருந்து வருகிறது.

35. தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் வல்லாண்மை, சிறுபான்மை மத ஒடுக்குமுறை, சாதி ஒடுக்குமுறை, தேசிய இன ஒடுக்குமுறை ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் இங்கு ஒடுக்கப்படும் மதச் சிறுபான்மையினர், சாதியினர், தேசிய இனங்கள் ஆகியோரின் தற்காப்பு மற்றும் விடுதலைக்கான கோரிக்கைகளும் போராட்டங் களும் வெடித்தவண்ணம் உள்ளன. இவற்றை சிற்சில சீர்திருத்தங்கள் மற்றும் கொடுநெறி ஒடுக்குமுறைகள் மூலம் நசுக்கும் முயற்சிகளை இந்திய ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

36. இந்திய தரகு முதலாளிய மற்றும் இந்துப் பார்ப்பனியத்தின் இந்தியத் தேசியம் என்கிற வல்லரசிய கொள்கையால் பல்வேறு தேசிய இனங்களின் தேசிய அரசுரிமை மறுக்கப்பட்டு ஒடுக்கப் படுகின்றன. ஆட்சியாளர்களின் வல்லரசிய சார்பு தரகுப் பொருளியல் மற்றும் நிலக்கிழாரியத்துடன் ஒப்பிச் செல்லும் கொள்கையால்

படிப்பகம்

www.padippkam.com



அவற்றின் தேசியப்பொருளியல் ஒடுக்கப்படுகிறது. வல்லரசிய மற்றும் பார்ப்பனிய கல்வி, மற்றும் பண்பாட்டுப் பரப்பல்களால் தேசியக் கல்வியும், பண்பாடுகளும் இழிவுபடுத்தப்பட்டு ஒடுக்கப்படுகின்றன. தரகு முதலாளிய -பார்ப்பனிய ஆற்றல்கள் இத்தகைய ஒடுக்குமுறைக் கொள்கைகள் மூலம் இந்துப் பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தியத் தேசியத்தை நிறுவும் இடைவிடாத கொடுநெறி முயற்சியை மேற்கொண்டுள்ளன. இது இந்தியாவில் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களும் முழுமையான வளர்ச்சி பெற்ற புதிய தேசங்களாக, குடிநாயக குமுகாயங்களாக, தன்னாட்சியும் தற்சார்பும் கொண்ட நாடுகளாக மாறும் குடிநாயக முயற்சிகளைத் தடுத்து ஒடுக்கி நசுக்குவதாய் இருக்கிறது. ஆனால், அவை தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயக தேசியக் குமுகாயங்களாக வளர்ச்சியடைவதில்தான் அவற்றின் பெரும்பான்மை மக்களின்-தொழிலாளர், உழவர், குட்டி முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகளின் சிறந்த நலன்கள் அடங்கியுள்ளன. எனவே, இந்தியாவில் இன்று நடைபெறும் வகுப்புப் போராட்டம் என்பது தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களின் கொடுநெறி இந்தியத் தேசியத்தை தகர்ப்பதற்கான குடிநாயக தேசிய விடுதலைப் போராட்டங்களையே நடுவம் கொண்டுள்ளது.

37. இந்தியாவில் தேசங்களின் விடுதலையோடு இணைந்த வடிவத்தில் மட்டுமே குடிநாயகப் புரட்சி இயல்வதாகும். இங்கு ஒடுக்கும் தேசிய இனம், அதில் வலிமை வாய்ந்த பாட்டாளி வகுப்பு கட்சி என்பதெல்லாம் இல்லை. தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல் களே இந்தியத் தேசிய ஒற்றுமை என்ற பெயரில் தேசிய ஒடுக்கு முறைகளைச் செலுத்தி வருகின்றனர். எனவே ஒவ்வொரு தேசிய இனப் பாட்டாளி வகுப்பு இயக்கமும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் வல்லாண்மையிலிருந்து தமது தேசத்தை விடுவிக் கும் தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவத்தில் குடிநாயகப் புரட்சியை நிறைவேற்றும் கடமையை எதிர்கொண்டிருக்கின்றன.

38. இந்தியாவில் பேராயக் கட்சி, பா.ஜ.கட்சி போன்றவை தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் வல்லரசிய அரசியல் கட்சி களாகச் செயல்பட்டு வருகின்றன. இந்திய இடது, வலது பொதுமைக் கட்சிகளும், நிகரமையக் கட்சிகளும், தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் நேரடியான அரசியல் கட்சிகளாக இல்லை எனினும், அவற்றின் வல்லரசியப் பொருளியம் மற்றும் திரிபியக் கொள்கை களால் இந்திய ஆளும் வகுப்புகளுக்கு ஊழியம் செய்யும் கட்சி களாகவே இருக்கின்றன. ஜனதா தளம் போன்றவை தரகு முதலாளிய-



பார்ப்பனியத்துடன் முரண்பாடு கொண்டவையோ அவற்றிலிருந்து மீண்டவையோ அல்ல.

39. இந்தியாவின் பல பகுதிகளிலும் மொழி, ஆட்சி வட்டார அடிப்படையில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவை ஆட்சி, மொழி வட்டகை அடிப்படையிலான தரகு முதலாளிய-பார்ப் பனிய ஆற்றல்களின் நலன் பேணுபவையாக அல்லது ஒடுக்கப்பட்ட சாதி, இன நலன் கோரிக்கைகளை முதன்மைப்படுத்துகின்ற, ஆனால் தரகு முதலாளிய-பார்ப்பனியத்துக்கு எதிராகத் தீர்மானமான நிலை எடுக்காத குட்டி முதலாளிய அமைப்புகளாக இருக்கின்றன. இவை தவிர தேசிய இன, சிறுபான்மை மத நலன்களுடன் பிணைக்கப்பட்ட, தேசியக் கோரிக்கைகளுடன் செயல்படுகின்ற, போர்க்குணம் மிக்க குட்டி முதலாளிய அமைப்புகளும் உள்ளன. இவற்றின் தேசிய குடிநாயகக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட முடியாதவையாகும்.

40. அம்பேத்கார் பதாகையின் கீழ் வெவ்வேறு தேசிய இனங் களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்றுதிரட்டும் இயக்கங் களில் ஒரு பிரிவு இந்துப் பார்ப்பனியத்தின் சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் குடிநாயகப் பண்புகளைக் கொண் டிருக்கும் அதேவேளையில் அவை பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்கு முறை பண்புகளைக் கவனிக்காத குட்டி முதலாளிய இயக்கங்களாக இருக்கின்றன. இவை தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு வல்லரசிய எதிர்ப்பு, நிலக்கிழாரிய எதிர்ப்பு குடிநாயகப் புரட்சியுடன் இணைந்த தேசிய விடுதலைப் புரட்சியின் தேவை ஆகியவற்றை உணர்ந்தவை அல்ல. இதன் விளைவாக, இதன் ஒரு பகுதி இந்தியத் தேசியத்துடன் ஒப்பிச் செல்லும் போக்கைக் கொண்டிருக்கிறது.

41. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே செயல் படுகின்ற இ.பொ.க.(மா-லெ) அமைப்புகள் இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்துக்கு எதிராகத் தீர்மானமாக வளரமுடியாத வல்லரசியப் பொருளிய அமைப்புகளே எனினும் இவற்றின் கோரிக் கைகளில் தேசிய, குடிநாயக பண்புகள் இருப்பதைப் புறக்கணிக்க முடியாது.

## இன்றைய அடிமைத் தமிழகத்தில் அரசியலும் பொருளியலும்

42. இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் கீழ் தமிழ்நாடு தேசிய அரசுரிமை மறுக்கப்பட்டுள்ள ஓர் அடிமை

படிப்பகம்

www.padippkam.com



நாடாகவே இருக்கிறது. தனது சொந்த அரசியல், பொருளியல், பண்பாட்டியல் வாழ்வைத் தீர்மானிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தேசியத்தகுதி மறுக்கப்பட்டு ஒரு வட்டார மாநிலத் தகுதியே வழங்கப் பட்டுள்ளது. தனது சொந்த எல்லையைத் தீர்மானிக்கும் உரிமையோ, குடிமகனைத் தீர்மானிக்கும் உரிமையோ அதற்கு இல்லை. தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்கள் மொழிவழி மாநில அமைப்பு கள் நிறுவுகையில் தமிழ்நாட்டின் பகுதிகள் பலவற்றை தமிழகத்துடன் சேர்க்காமல் எல்லையைக் குறுக்கிவிட்டிருக்கிறார்கள்.

43. மாநில அரசு என்ற பெயரில் தமிழகத்தில் அமைந்துள்ள அரசு இறையாண்மை கொண்ட தேசிய அரசு அல்ல. இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசின் பொம்மை அரசுக்கும் கீழான எவ்வித அதிகாரமும் அற்ற எடுபிடி அரசே அது. இங்குள்ள சட்டமன்ற மற்றும் மக்கள் பகராளி அமைப்புகள் ஓர் இறையாண்மை கொண்ட நாட்டின் மக்கள் பகராளி அமைப்புகள் அல்ல. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அமைப்புகளும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய வல்லாண்மையின் கீழ் உள்ள அடிமை நிறுவனங்களேயன்றி வேறல்ல.

44. இந்தியக் குடியுரிமை எனும் பெயரில் தமிழ்த் தேசத்திற்குள் வட இந்திய மார்வாரி, சேட் தரகு முதலாளிய-பார்ப்பனிய கும்பல்கள் பெருமளவில் நுழைந்து தொழில், வணிகம், நிதித் துறைகளைக் கைப் பற்றி வருகின்றன. தமிழீழ விடுதலைப்போருக்கு வெளிப்படையாகத் ஆதரவளிக்க முடியாத அடிமைநிலையில் தமிழகம் வைக்கப்பட்டுள்ளது.

45. இந்தியத் தரகுமுதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசு பின்பற்றும் புதுவன்குடி ஆதரவுக் கொள்கையால் தமிழகத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ் என பல்வேறு வல்லரசியங்களும் நுழைந்து நாட்டின் வளங்களையும் மக்களின் உழைப்பாற்றலையும் கொள்ளையடித்துச் செல்கின்றன. தமிழகம் வல்லரசியங்களின் வேட்டைக்காடாகவும் இந்தியத் தரகு பெருமுதலாளிகளின் கொள்ளைக்காடாகவும் மாற்றப்பட்டுள்ளது. வல்லரசியங்களின் கழிவுத் தொட்டியாகவும் ஆராய்ச்சிக் கூடமாகவும் பொழுதுபோக்கு நடுவமாகவும் மாற்றப்பட்டு வருகிறது.

46. இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய அரசு மேற்கொண்ட நிலச்சீர்திருத்தம், வேளாண் சீர்திருத்தம், பசுமைப்புரட்சி போன்ற எவையும் அரை நிலக்கிழாரிய உறவுகளை ஒழிக்கவில்லை. அது பெருநில உடைமையாளர்கள் வசதி படைத்தவர்களாக மாறவும், வல்லரசியர்கள் தமிழக வேளாண்மையைத் தம் சுரண்டல் களமாக மாற்றிக் கொள்ளவும் மட்டுமே பயன்பட்டது. இதனால் வேளாண் மக்களின் துயரம் பெருகியதேயன்றி குறையவில்லை.



47. இந்திய தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசிய அரசின் புதுவன்குடி ஆதரவு தரகுப் பொருளியல் கொள்கையால் தமிழகத்தின் தேசியப் பொருளியல் கட்டமைக்கப்படுவது கடுமையாகத் தடுக்கப் பட்டுள்ளது. தேசியத் தொழில்களும் தேசிய முதலாளிகளின் வளர்ச்சி யும் கடுமையாக நசுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் புதுவன்குடி ஆதரவு தரகுப் பொருளியல் கொள்கையாலும், நிலக்கிழாரியத் துடனான ஒப்பிச் செல்லும் கொள்கையாலும் தமிழகம் தொடர்ந்து முதலாளியத்துக்கு முந்திய அரைநிலக்கிழாரிய, சாதிய உறவுகளால் துயருறும் மிகப் பெரும்பான்மையான உழவர் மக்களைக் கொண்ட வேளாண் நாடாகவே நீடிக்கிறது. 70 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட மக்கள் ஊர்ப்புறங்களில் உழவர்களாக வாழ்கிறார்கள். அவர்களில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்டவர்கள் முற்றிலும் நிலமற்ற கூலி அல்லது மிகவும் குறைந்த நிலம் கொண்ட ஏழை உழவர்களாக அரைப்பட்டினி, அரை அடிமை நிலையில் வாழ்கிறார்கள். பஞ்சம், வறட்சி, வேலையின்மை, அதிகார வகுப்புகளின் மேலாண்மை காரணமாக அவர்கள் மேலும் மேலும் தாம் வாழும் ஊர்களிலிருந்து வெளியேற வல்லந்தம் செய்யப்படுகிறார்கள். வட்டி, வணிக, ஒட்டுண்ணி முதலீடுகள் மற்றும் மேலாண்மை வகுப்புகளின் சுரண் டல் காரணமாக நடுத்தர உழவர்கள் மேலும் மேலும் தம் நிலங்களை இழந்து கூலி, ஏழை உழவர்களுடன் சேர்ந்து வருகிறார்கள். வல்லாண்மை வகுப்பில் இணைந்து கொள்ளும் மிகச்சிறிய பகுதி பணக்கார உழவர்களைத் தவிர்த்து ஒரு பகுதியினர் தம் எதிர்கால நம்பிக்கையை இழந்து வருகிறார்கள்; மற்றொரு பகுதியினர் நடுத்தர உழவர்களாக வகுப்பு இறக்கம் பெற்று வருகிறார்கள். மிகப் பெரும் பான்மையான மக்கள் படிப்பறிவும், வேலைவாய்ப்பும் அற்றவர்களாக வறுமையிலும் அறியாமையிலும் உழல்கிறார்கள். ஆளும் வகுப்பு களின் புதுவன்குடி ஆதரவு கொள்கையால் மேலும் மேலும் வேலை வாய்ப்புகள் பறிக்கப்பட்டு வேலை இழந்தவர்கள் பெருகிவருகிறார்கள், பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் உழைப்பாற்றல் வீணடிக்கப் பட்டு வருகிறது. குட்டி முதலாளிய வகுப்பு தனது எதிர்காலம் குறித்த முழுநம்பிக்கையும் இழந்து வருகிறது. தொழிலாளர்கள், உழவர்கள் மீதான தாக்குதலும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையும், குழந்தை உழைப்புச் சுரண்டலும், கொத்தடிமை முறையும் அதிகரித்து வருகின் றன. என்றுமில்லா விலை உயர்வுகளால் மக்களின் வாழ்க்கை சொல் லொணாத் துயரம் கொண்டதாகிவருகிறது. தொடர்ந்து பெரிதும்

www.padippkam.com



வல்லாண்மை வகுப்பினர் மேல்தட்டு சாதியினராகவும் இருந்துவருவது தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் மீதான குமுகாய ஒடுக்குமுறையும் சுரண்டலும் நீடிப்பதற்கும், அதிகரித்து வருவதற்கும் காரணமாக இருந்து வருகிறது.

48. ஆங்கிலேய வல்லரசியத்தைத் தொடர்ந்து தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசிய அரசு மேற்கொண்டு வரும் தரகு பொருளியல் தொழில் கொள்கையும், வேளாண் கொள்கையும் தமிழகத்தின் சுற்றுச் சூழலை—காற்று, மண், நீர், காடு, கடல் என அனைத்தையும்— மாசுப்படுத்தி பெருமளவில் சீரழித்துவருகிறது. மண் வளம் கெடுக்கப்பட்டு வேளாண் சமநிலை குலைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பழம் மரபு அறிவியல் தொழில்நுட்பங்களும் ஆற்றல்களும் மண்ணுக்குப் பொருந்திய உயரிய விதைகளும் வேளாண் முறையும் நீர்ப்பாசனம், அறிவியல் முறைகளும் மேலும் வளர்த் தெடுக்கப்படுவதற்கு மாறாக அழிக்கப்பட்டுள்ளன.

49. தமிழின் வரலாறு இயல்பிலேயே பார்ப்பனிய எதிர்ப்புத் தன்மை கொண்டது என்பதால் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்கள் தமிழ், தமிழ்நாடு, தமிழினம் என்ற சொற்களைக் கண்டே நடுங்குகின்றன. பிரிவினைக்குரல், தீவிரவியம் என்ற முத்திரைகளுடன் அவற்றை ஒடுக்கி நசுக்குவது; மொழிவெறி, இனவெறியென அவற்றை இழிவுபடுத்துவது; அதே நேரத்தில் அவற்றை ஏளனத்துக்குரியதாக்கி ஒதுக்குவது என்ற முறைகளை அவை கையாள்கின்றன. தமிழனையும் தமிழையும் இழிவுபடுத்துவதற்கும், சமக்கிருத, ஆங்கில மயமாக்கம் மூலம் தமிழ்த் தேசத்தின் தனித்தன்மையை ஒழிப்பதற்கும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்கள் திட்டமிட்டு ஒவ்வொரு பொழுதையும் பயன்படுத்திக்கொள்கின்றனர். இதில் தமிழகத்தில் உள்ள தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்கள் முன்னணியில் உள்ளனர்.

50. புதுவன்குடிக் கொள்கையால் மேலைக் கல்வியும், பண்பாடும், வெள்ளமென பாய்ச்சப்பட்டு தமிழகம் நச்சூட்டப்பட்டு வருகிறது. கொடிய நோய்களும், பண்பாட்டுச் சீரழிவுகளும் அதிகரித்து வருகின்றன. மேலை வல்லரசிய அடிமை மயக்கமும், ஆங்கில மயக்க அடிமை நிலையும் வளர்க்கப்படுகின்றன. தேசியத் தொழில் வளர்ச்சியின்மையால் குமுகாயம் பின்தங்கியதாக, சாதியப் பிளவுகளுடனும் ஒடுக்குமுறைகளுடனும் தொடர்கின்றன. பார்ப்பனிய இந்து வல்லாண்மையின் விளைவாக இஸ்லாமியர் மற்றும் சிறுபான்மை மதத்தினர் மீதான ஒடுக்குமுறையும் அதனால் மதக்கலவரங்களும் நீடிக்கின்றன.



51. தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியர்களால் தமிழகத்தின் தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயக தேசிய பண்பாட்டிற்கு மிகப்பெரிய கேடுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கலை - இலக்கியங்கள் பலவும் பார்ப்பன மயமாக்கப்பட்டுள்ளன. தமிழ்த் திருவிழாக்களுக்கு மாறாக இந்துப் பார்ப்பனிய விழாக்கள் புகுத்தப்பட்டுள்ளன அல்லது பார்ப்பன மயப்படுத்தப்பட்டுள்ளன. கலை, ஆட்சி, மருத்துவம், வழிபாடு ஆகிய அனைத்து துறைகளிலும் தமிழ்ப் பெயர்களும் கலைச்சொற்களும் பார்ப்பன மயப்படுத்தப்பட்டுள்ளன. வல்லரசிய ஆதரவு பார்ப்பனிய ஆதரவு கலை இலக்கியங்கள் உயரியதாகவும் தமிழ்க் கலை, இலக்கியங்கள் இழிந்ததாகவும் கற்பிக்கப்படுகின்றன. கல்வி, ஆட்சி, இறை வழிபாடு ஆகிய அனைத்து நிலைகளிலும் தமிழ் மொழிக்கு மாறாக ஆங்கிலம், சமக்கிருதம், இந்தி ஆகிய மொழிகள் புகுத்தப்பட்டு அவற்றின் வல்லாண்மை நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசத்தின் வரலாறும் பண்பாடும் மறைக்கப்பட்டு பார்ப்பனியத்தின் வல்லாண்மை வரலாறும் பண்பாடுமே கற்பிக்கப்படுகின்றன. தேசிய, சாதிய ஒடுக்குமுறைக்கு ஆதரவான இலக்கியங்கள் குறிப்பாக இந்து மத இலக்கியங்கள் போற்றப்படுகின்றன, பரப்பப்படுகின்றன. செய்தி, ஒளி - ஒலிபரப்பு மற்றும் பரப்புரை நிறுவனங்கள் அனைத்திலும் மேலை மற்றும் பார்ப்பனிய பண்பாட்டுப் பரப்பல் தொடர்ந்தும் திட்டமிட்டும் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ் மருத்துவமும் அதன் தொன்மைச் சிறப்பும் புறக்கணிக்கப்படுகிறது. மொத்தத்தில் தமிழ்த் தேசத்தின் வரலாற்றையும் அதன் இருப்பையும் அதன் தொன்மைச் சிறப்பையும் முற்றாக மறைத்து அழிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

52. தமிழகத்தில் பேராயக் கட்சியும், இந்து முன்னணி ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புகளுடன் பா.ஜ.க.வும் அனைத்திந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களின் அரசியல் கட்சிகளாகச் செயல்பட்டுவருகின்றன. இவை இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் தமிழ்த்தேசிய ஒடுக்குமுறைக்கு முற்றிலும் துணைநிற்கின்றன. தமிழக தரகு முதலாளிய, நிலக்கிழாரிய, பார்ப்பனிய ஆற்றல்களும், வடஇந்தியாவிலிருந்து தமிழகத்தில் நிலைகொண்டுள்ள மார்வாரி போன்ற வட பார்ப்பனிய தரகு ஆற்றல்களும் இவற்றுக்குப் பின்னணியில் உள்ளன.

53. இந்துப் பார்ப்பனியத்தின் வல்லாண்மை முயற்சிகளை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் இ.பொ.க., இ.பொ.க.(மா) கட்சிகள் இந்தியத் தேசிய ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை என்ற பெயரில் தமிழ்த் தேசியப் பகை ஆதரவு, தேசிய ஒடுக்குமுறை ஆதரவு கொள்கை

படிப்பகம்

www.padippkam.com



களையே பின்பற்றி வருகின்றன. தமிழ்த் தேசியத்திற்கான குரல் எழும்போதெல்லாம் அதை இனவெறி என முத்திரைகுத்தி ஒதுக்கி எதிர்ப்பதன் மூலம் பார்ப்பனியத்திற்குத் துணைபோகின்றன. இவற்றின் வல்லரசியப் பொருளியமும், திரிபியமும் இவற்றை தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசியத்தின் துணைவர்களாக மாற்றியுள்ளன. தரகு தொழில் நிறுவனங்களின் வசதி படைத்த தொழிலாளி வகுப்பும் வசதி படைத்த மேல்தட்டு வகுப்புப் பிரிவுகளும் இக்கட்சிகளின் பின் உள்ள வகுப்பு ஆற்றல்களாகும்.

54. இட ஒதுக்கீடு, தன்மானம், தன்மதிப்பு, பகுத்தறிவு, பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழ்த் தேசியம் போன்ற பல்வேறு கோரிக்கை களுடன் செயல்பட்டு வரும் திராவிட இயக்க அமைப்புகளில் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. போன்ற கட்சிகள் தமிழ்த் தேசியத்தின் கோரிக்கையை 'மாநில தன்னாட்சி' என்பதாகக் குறுக்கிக்கொண் டுள்ளன. தொடக்கத்தில் 'திராவிட நாடு' கோரிக்கையுடன் தமிழகத்தில் ஒரு தேசிய விழிப்புணர்வை உருவாக்குவதில் பங்காற்றிய தி.மு.க. பின்னர் அக்கோரிக்கையைக் கைவிட்டு தமிழ் நாட்டின் தேசியத் தகுதியையே ஏற்றுக் கொள்ளாத மாநிலத் தன்னாட்சிக் கோரிக்கையை முன்வைத்ததன் மூலம் தமிழ் மக்களை தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்துடன் ஒப்பிச் செல்ல வைத்து தொண்டூழியம் செய்யும் சீரழிந்த பிழைப்புக்காரர்களின் கட்சியாகியிருக்கிறது. இக்கட்சியி லிருந்து பிரிந்து உருவான கட்சிகளின் நிலையும் இதிலிருந்து வேறுபட்டதாய் இல்லை. இக் கட்சிகளின் பின்னணியில் இருப்பவை தமிழ் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஆற்றல்களேயாகும்.

55. தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. கட்சிகள் தமிழ்த் தேசத்துக்கும், மக்களுக்கும் செய்திருக்கும் தீங்கு பேராயக் கட்சி இழைத்த தீங்கு களுக்கு எவ்வகையிலும் குறைந்தவையாக இல்லை. பேராயக் கட்சி தமிழ் மக்களை நேரடியாகவே இந்தியத் தேசியத்திற்கும் இந்திக்கும் துணையாக மக்களை அணியப்படுத்தும் பணிகளைச் செய்துவந்த அதே வேளையில், அதை எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்ட இக் கட்சிகள் தமிழ், தமிழினம் எனும் பெயரில் மக்களை பேரளவில் அணிதிரட்டி இந்தியத் தேசத்துடன் - இந்திய ஆளும் வகுப்புகளுடன், தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்துடன் ஒப்பிச் செல்ல வைத்தன. இவற்றின் இந்தி எதிர்ப்பு முழக்கம் உள்ளிட்ட தமிழ்த் தேசிய சாயை கொண்ட எல்லா முழக்கங்களுமே தமிழ் மக்களின் தேசிய உணர்வையும், எழுச்சியையும் மழுங்கடித்து இந்தியத் தேசியத்துக்கு துணையான ஒரு சூழலை தமிழ்மக்களிடம் ஏற்படுத்து வதற்கான செயலுத்திகளாகவன்றி வேறாக இல்லை. 1965-இல் எழுந்த



மாபெரும் இந்தி எதிர்ப்பு மாணவர் எழுச்சியை தமது பதவி நோக்கங்களுக்காகக் காட்டிக் கொடுத்து இன்று அதை ஒரு சடங்காக வும், பகடிப் பொருளாகவும் இக் கட்சிகள் மாற்றிவிட்டதும், பதவிக்காகப் பேராயக் கட்சியுடன் கூட்டுச்சேர அலைபாய்ந்து கொண்டிருக்கும் இக்கட்சிகளின் பிழைப்புக்காரச் செயல்பாடுகளும் இவற்றுக்குத் தக்க சான்றுகளாகும்.

56. இவை தவிர சில சீர்திருத்த குடிநாயகக் கோரிக்கைகளுடன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் சில சிறிய, குட்டி முதலாளிய திராவிட இயக்க அமைப்புகளும், தூயதமிழ் இயக்கங்களும் உள்ளன. மொழித் துறையில் ஆங்கில-சமக்கிருத வல்லாண்மைக்கு எதிராக உறுதியாகநிற்கும் தூயதமிழ் இயக்கங்கள் தேசிய விடுதலைக் கோரிக் கையிலும் கூட ஆர்வமுடையவையாக இருப்பினும் அதற்கான அறிவியல் வகைப்பட்ட கொள்கைகளோ, திட்டங்களோ, நடை முறையோ கொண்டவையாக இல்லை. தேசியத் தன்னுரிமை, குமுக ஞாயம் எனும் முழக்கங்களுடன் தமிழ்த் தேசிய நலன், தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் ஆகியவற்றில் அக்கறை கொண்ட ஆற்றல்களும், தன்னல ஆற்றல்களும் இணைந்த பா.ம.க., திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாகத் தன்னை முன்னிறுத்தி வருகிறது. இதைத் தவிர தமிழ்த் தேசத் தன்னுரிமை எனும் முதலாளியக் குடி நாயக முழக்கத்துடன் வேறு சில அமைப்புகளும் அண்மைக்காலமாக தமிழக அரசியலில் செயல்பட்டு வருகின்றன. இவை எல்லாம் முதலாளிய, குட்டிமுதலாளிய அமைப்புகளேயன்றி வேறல்ல.

57. வல்லரசிய நாடுகளிலிருந்து பெறும் நிதி உதவியுடன் தமிழக மெங்கும் பரவலாகச் செயல்பட்டு வரும் "தொண்டு" நிறுவனங்களில் பல மக்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டியல் கோரிக் கைகளை முன்வைத்து மக்கள் நடுவில் செயல்பட்டு வருகின்றன. மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவையாக இவை தம்மை வெளிப்படுத்திக் கொண்டபோதும் இவற்றின் மெய்யான நோக்கம் மக்களின் புரட்சியுணர்வையும் புரட்சி இயக்கங்களையும் சீர்குலைத்து வல்லரசியத்திற்கு தொண்டு செய்வதேயாகும்.

58. தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் சாதிய வல்லாண்மையின் விளைவாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டுக்கான இயக்கங்கள் மிகுந்த செல்வாக்குடன் வெளிப்பட்டு வருகின்றன. பெரியார்-அம்பேத்கார் பதாகைகளின் கீழ் வெளிப்படும் இக்கோரிக்கைகளுக்கான இயக்கங்களால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒரு சிறு பிரிவினர் தம்மை மேல்தட்டு

படிப்பகம்

www.padippkam.com



வகுப்பு பிரிவினராக மாற்றியமைத்துக்கொள்ள முடிந்திருக்கிறது. ஆனால் இன்னும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் மிகப் பெரும்பான்மையான மக்கள் தமது குமுகாய ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டுவிடவில்லை. இட ஒதுக்கீட்டு முறை இம் மக்களின் முழு விடுதலைக்கான வழியாகாது என்பதை அம்மக்கள் மேலும் மேலும் உணர்ந்து வருகின்றனர். இதன் விளைவாக இட ஒதுக்கீட்டுக் கோரிக் கைகளையும் தாண்டி போர்க்குணமிக்க போராட்ட எழுச்சிகள் அம்மக்களிடம் ஏற்பட்டு வருகின்றன.

59. தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற யாரையும் விட கூடுதலான ஒடுக்கு முறைக்கு உள்ளாகி இருக்கும் மக்களாவார்கள். அவர் களுடைய விடுதலையும் முன்னேற்றமும் இன்றி நாட்டின் விடுதலை, முன்னேற்றம் என்பது இல்லை. தமிழ்நாடு தேசிய விடுதலைப் புரட்சி என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையையும் உள்ளடக்கிய ஒன்றாகவே இருக்கமுடியும்.

60. தொடக்கத்திலிருந்தே தமிழக பாட்டாளி வகுப்பு இயக்கம் இந்தியத் தேசியம் என்கிற வல்லரசிய பொருளியத்துக்குப் பலியாகி தமிழ்த் தேசியத்திற்குத் தலைமையளிக்கும் பொறுப்பை மேற்கொள்ளத் தவறியிருக்கிறது. தமிழகத்தை சேர்ந்த பல்வேறு இ.பொ.க.(மா-லெ) அமைப்புகளும் இக் குற்றச்சாட்டுக்கு உரியவையேயாகும். எனினும் அண்மைக்காலமாக தமிழ்ப் பாட்டாளி வகுப்பு இயக்கம் தம் நீண்ட நெடிய பயணத்தில் தம் தவறுகளை உணர்ந்து, அதிலிருந்து மீண்டு தமிழ்த் தேசிய விடுதலைப் புரட்சித் திட்டத்துடன் செயற்களத்தில் இறங்கி இருப்பது தமிழ் மக்களின் எதிர்கால நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறது.

## தமிழ்க் குமுகாயத்தின் இன்றைய அடிப்படை, முதன்மை முரண்பாடுகளும் தேசிய விடுதலைப் புரட்சியும்

61. இன்றைய தமிழ்க் குமுகாயம் பல முகமையான வகுப்பு முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. முதலுக்கும் கூலி உழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு, வல்லரசியத்திற்கும் தேசத்திற்கும் இடையி லான முரண்பாடு, தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு, சாதிய நிலக்கிழாரியத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, ஆளும் வகுப்புகளுக்கு



இடையிலான முரண்பாடு என்று பற்பல முரண்பாடுகளைக் கொண் டிருக்கிறது. இம் முரண்பாடுகளில் தமிழ்க் குமுகாயத்தின் இன்றைய அடிப்படை முரண்பாடுகளாக இருப்பவை வல்லரசியத்திற்கும் தேசத் திற்கும் இடையிலான முரண்பாடும், சாதிய நிலக்கிழாரியத்துக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுமேயாகும். ஏனெனில் இம் முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் தமிழ்த் தேசத்தின் இப்போதைய விளைப்பு முறை அடுத்த முன்னேறிய கட்டத்திற்கு நகரமுடியாது. அதே நேரத்தில் இன்றைய தமிழ்க் குமுகாயத்தின் முதன்மை முரண் பாடாக இருப்பது இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத் திற்கும் தமிழ்த் தேசத்துக்கும் இடையிலான முரண்பாடேயாகும். ஏனெனில் இந்த முரண்பாட்டைத் தீர்க்காமல் அடிப்படை முரண்பாடுகளைத் தீர்ப்பதை நோக்கி தமிழ்க்குமுகாயம் முன்னேற முடியாது.

62. தமிழ்த் தேசத்தின் இன்றைய அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான புரட்சியை தமிழ்த் தேசிய முதலாளிய வகுப்பு நடத்தாது. காரணம், அது மிகவும் வலிமை குன்றியதாகவும் புரட்சிக் குணம் இழந்ததாகவும் இருக்கிறது. எனவே இம்முரண்பாடுகளைத் தீர்த்து தமிழ்க் குமுகாய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் மாபெரும் கடமையை வரலாறு தமிழ்ப் பாட்டாளி வகுப்பின் தலையிலேயே சுமத்தியுள்ளது. இதுவே நம் புரட்சியின் கட்டத்தையும் தன்மையையும் தீர்மானிக்கிறது. இது உழவர் புரட்சியைச் சாரமாகக் கொண்ட புதிய குடிநாயகப் புரட்சியை உள்ளடக்கிய தேசிய விடுதலைப் புரட்சியாகும்.

63. உழவர் புரட்சியைச் சாரமாகக் கொண்ட புதிய குடிநாயகப் புரட்சியை நிறைவுசெய்யும் தேசியவிடுதலைப் புரட்சிக்கு தலைமை ஏற்பது பாட்டாளி வகுப்பு என்பதால் இப்புரட்சி பழைய வகைப்பட்டதன்று. மாறாக, புதிய வகைப்பட்டதாகும். இதன் நோக்கம் ஒரு முதலாளிய குமுகாயத்தை அமைப்பதோ கட்டிக்காப்பதோ அல்ல. மாறாக, நிகரமையத்திற்குத் தங்குதடையின்றி முன்னேறும் ஒரு புதிய குடிநாயகக் குமுகாயத்தை அமைப்பதும் தொழிலாளர், உழவர் மற்றும் பிற புரட்சி மக்களின் புரட்சி அதிகாரத்தை நிறுவுவது மேயாகும். இப்புரட்சி மாபெரும் அக்டோபர் புரட்சியால் தொடக்கி வைக்கப்பட்ட உலக நிகரமையப் புரட்சியின் ஒரு பகுதியாகும்.

64. பாட்டாளி வகுப்புத் தலைமையில் நடைபெறும் தேசிய விடுதலைப் புரட்சியானது தொழிலாளி வகுப்பு, உழவர்கள், நகர்ப்புற குட்டிமுதலாளிகள் மற்றும் பிற புரட்சி மக்களின் மக்கள் குடிநாய

படிப்பகம்

www.padippkam.com



கத்தைப் பாட்டாளி வகுப்புத் தலைமையில் நிறுவும். தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் மேற்குறிப்பிட்டவர்களே. இவர்களுடைய மக்கள் குடிநாயக அரசை நிறுவி 90% மக்களுக்கு குடிநாயகத்தையும் விரல்விட்டு எண்ணத்தக்க தேசப் பகைவர்கள் மற்றும் மக்கள் பகைவர்கள் மீது வல்லதிகாரத்தையும் செலுத்தும்.

65. பாட்டாளி வகுப்பால் தலைமை தாங்கப்படும் தேசிய விடுதலைப் புரட்சியில் முகமையான ஆற்றல் பெரிதும், தாழ்த்தப்பட்ட-பிற்படுத்தப்பட்ட மக்களாய் இருக்கும் உழவர்களேயாவர். பாட்டாளி வகுப்பு முழுமையாகவும் உறுதியாகவும் நிலமற்ற கூலி, ஏழை உழவர்களைச் சார்ந்து நின்று நடுத்தர உழவர்களுடன் இணைந்து நிற்கும். ஒரு பகுதி பணக்கார உழவர்களைத் தன் பக்கம் வென்றெடுக்கும்; மற்றொரு பகுதியை நடுநிலைப்படுத்தும்; இறுதியாக ஒரு சிறு பகுதியினரே புரட்சியின் எதிரிகளோடு சேருவர். நகர்ப்புற குட்டிமுதலாளிகளும் புரட்சி அறிவாளிகளும் பாட்டாளி வகுப்பின் உறுதியான கூட்டாளிகளாவர். தேசிய முதலாளிகளும் முதலாளிய அறிவாளிகளும் ஊசலாடும் நட்பு ஆற்றல்களாவர்.

66. தமிழகப் புரட்சியானது, முழுமையாக எடுத்துக் கொண்டால் இரு தெளிவான மாறுபட்ட வரலாற்று வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டிருக்கிறது. அவை மக்கள் குடிநாயகப் புரட்சி, நிகரமையப் புரட்சி கட்டங்களாகும். தமிழகப் புரட்சியின் இப்போதைய கட்டம் ஒரு நிகரமைய குமுகாயத்தை நிறுவுவதற்குமுன் உள்ள மாறிக் கொண்டிருக்கும் கட்டமாகும். அதாவது, தேசிய விடுதலைப் புரட்சியின் மூலமாக நிறைவுறும் மக்கள் குடிநாயகப் புரட்சிக் கட்டமாகும். மக்கள் குடிநாயகப் புரட்சியானது நிகரமையப் புரட்சிக்கான இன்றியமையாத அணியப்படுத்தலும், நிகரமையப் புரட்சியானது மக்கள் குடிநாயகப் புரட்சியின் தொடர்ச்சியுமாகும். தேசிய விடுதலைப் புரட்சி மூலம் மக்கள் குடிநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதால் மட்டுமே நம் நாடு ஒரு நிகரமையக் குமுகாயத்தை கட்டமைக்கும் கட்டத்திற்கு முன்னேற முடியும். தேசிய விடுதலைப் புரட்சி மூலம் மக்கள் குடிநாயகப் புரட்சி என்ற முதற்கட்டம் முழுமை பெற்ற உடனேயே எத்தகைய இடைவெளியும் இன்றி நிகரமையப் புரட்சிக் கட்டம் தொடங்கும். நிகரமையப் புரட்சி எவ்வளவு விரைவாக முழுமை பெறும் என்பது பாட்டாளி வகுப்பு வல்லதிகாரத்தின் கீழான விளைப்பு ஆற்றல்களின் வளர்ச்சி, நமது வலிமை, அமைப்பு முறையில் திரட்டப்பட்ட பாட்டாளி வகுப்புத் தலைமையின் கீழ் அமைந்த தமிழ் உழைக்கும் மக்கள் ஒற்றுமையின் வலிமை ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். கட்சி தங்குதடையற்ற



புரட்சிக்காக நிற்கிறது. நமது கட்சியின் குறைந்த அளவுத் திட்டம் அல்லது பொதுத்திட்டம் தேசிய விடுதலைப் புரட்சி மூலம் மக்கள் குடிநாயக அரசை நிறுவுவதாகும். அதிக அளவுத்திட்டம் முதலில் ஒரு நிகரமையக் குமுகாயத்தையும் பின்னர் ஒரு பொதுமைக் குமுகாயத்தையும் அதாவது வகுப்புகளற்ற போர்களற்ற குமுகாயத்தை நிறுவுவதாகும்.

## தேசிய விடுதலைப் புரட்சியின் பணிகள்

67. ***அ) அரசியல் துறையில்***

1. தமிழகத்தை இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் வல்லாண்மையிலிருந்து மீட்டு முழு இறையாண்மை கொண்ட நாடாக அறிவிக்கும்.

2. தமிழகத்தில் உள்ள இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் எல்லாவகையான அரசியல் அதிகார நிறுவனங்களையும் கலைத்துவிட்டு ஒரு தேசிய அரசை - மக்கள் குடிநாயக அரசை நிறுவும்.

3. தமிழ் மக்கள் குடிநாயக அரசு அனைத்து மட்டங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பகராளிகளால் ஆன அதிகார அமைப்புகளைக் கொண்டதாய் இருக்கும். அதிகார அமைப்புகளுக்கான தமது பகராளிகளைத் தேர்ந்தெடுக்கவும் திருப்பி அழைக்கவும் மக்கள் உரிமை பெற்றிருப்பர்.

4. தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் ஞாயமன்றங்கள் ஒழிக்கப்பட்டு அனைத்து மட்டங்களிலும் "தமிழ்த்தேசிய மக்கள் ஞாயமன்றங்கள்" அமைக்கப்படும். அவை தமிழக மக்கள் குடிநாயக அரசின் புதிய அரசியல் அமைப்புக்கு உட்பட்டு இயங்கும்.

5. தமிழகத்தில் இருக்கும் தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் அனைத்துவகை படை அமைப்புகளும் கலைக்கப்பட்டு புரட்சிகர தேசிய விடுதலைப் படையும் மக்களின் படைக்கலம் தாங்கிய அமைப்புகளும் மக்கள் குடிநாயக அரசையும் மக்களையும் காக்கும் பொறுப்பேற்கும்.

படிப்பகம்

www.padippkam.com



6. எதிர்ப் புரட்சியாளர்கள், தேசப் பகைவர்கள், மக்கள் பகைவர்கள் ஆகியோரின் ஒப்போலையுரிமை பறிக்கப்படும். பதினெட்டு அகவையடைந்த அனைவருக்கும் சமமான நேரடியான அனைத்தும் தழுவிய ஒப்போலையுரிமை வழங்கப்படும்.

7. கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூட்டும் - சங்கமாகச் சேரும் உரிமை எதிர்ப்புரட்சியாளரையும் தேச பகைவரையும் தவிர்த்து அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும். மாந்த உரிமை பேணப்படும்.

8. தேசிய இன சிறுபான்மையினர், புலம்பெயர்ந்து வந்தோர், பழங்குடி மக்கள் ஆகியோருடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். அயலகம் வாழ் தமிழ் மக்களும், அறிவாளரும், திறனாளரும் தாயகம் திரும்ப வரவேற்கப்படுவர்.

### ஆ) பொருளியல் துறையில்

1. அயலக முதலீடுகள், வங்கிகள், தொழில் நிறுவனங்கள் அனைத்தும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு தேசிய உடைமையாக்கப்படும்.

2. தரகுப் பெருமுதலாளிகளின் நிறுவனங்கள், உடைமைகள் அனைத்தும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்பட்டு தேசிய உடைமையாக்கப்படும்.

3. வல்லரசியங்களுடன் இந்திய அரசு செய்துகொண்டுள்ள காப்பு வரி, வணிக பொது ஒப்பந்தம் உள்ளிட்ட பொருளியல் ஒப்பந் தங்கள் அனைத்தும் தமிழகத்தில் செயலிழக்கச் செய்யப்படும்.

4. பெருநிலக்கிழார்கள், அவர்களின் பிடியில் இருக்கும் கோயில்கள், மடங்கள் மற்றும் பிற மத நிறுவனங்களின் நிலங்களும் நிறுவனங்களும் இழப்பீடின்றி பறிமுதல் செய்யப்படும். நிலமற்ற கூலி, ஏழை உழவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு கூட்டுறவு முறை ஊக்குவிக்கப்படும். கொடு வட்டி மற்றும் அனைத்து ஒட்டுண்ணி முதலீடுகளும் ஒழிக்கப்படும். உழவர்களின் கடன்கள் முற்றாக நீக்கம் செய்யப்பட்டு அவர்களுடைய வேளாண் நிதித் தேவைகளும் இடுபொருள் மற்றும் சந்தைத் தேவைகளும் உரிய முறையில் நிறைவு செய்யப்படும். நிலக்கிழாரிய, அரைநிலக் கிழாரிய, சாதிய வல்லாண்மை உறவுகள் முற்றாக ஒழிக்கப்படும்.



5. தொழிற்சாலைகள் இயங்கும் முறை சீரமைக்கப்பட்டு தொழிலாளர் வாழ்நிலை உயர்த்தப்படும். எட்டுமணிநேர வேலை, ஊதிய உயர்வு, வாழ்நிலை உயர்வு உறுதி செய்யப்படும். தேசியத் தொழில்களுக்கும், தேசிய முதலாளிகளுக்கும் பாதுகாப்பும்- வளர்வதற்கு ஊக்கமும் அளிக்கப்படும். நமது தேசிய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வகை செய்யப்படும்.

6. வேளாண் சமநிலை பேணப்படும். உயரிய மரபுவழி விதைகள், வேளாண் முறைகள், பாசன முறைகள் பாதுகாக்கப்பட்டு உரிய வழியில் வளர்த்தெடுக்கப்படும். தேசிய வேளாண் கொள்கை வகுக்கப்பெற்று செயல்படுத்தப்படும்.

7. மீனவர்கள், கைத்தறி மற்றும் பிற கைவினைத் தொழிலாளர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வகைசெய்யப்படும்.

8. சுற்றுச்சூழல் கெடுக்கும் தொழில், வேளாண் முறைகள் கட்டுப் படுத்தப்படும். இயற்கை, மாந்தன், தொழில்நுட்ப வளர்ச்சி இவற் றுக்கிடையிலான சமநிலை பாதுகாக்கப்படும். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு, சிறு தொழில்களுக்கு முதன்மை யளித்து பெருந்தொழில்களின் வளர்ச்சிக்கு வகை செய்யப்படும். இவற்றுக்கிடையிலான சமநிலை பாதுகாக்கப்படும். அயலக அறிவியல், தொழில்நுட்ப ஆக்கங்கள் நமது நாட்டின் தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயக வாழ்விற்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றுக்கும் உதவும் வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

9. கறுப்புப் பணம், கள்ளச் சந்தை, பதுக்கல், விலை உயர்வு, வேலை இன்மை ஒழிக்கப்படும். அதிகமான வரிவிதிப்புகள் நீக்கப்பட்டு ஒருமுகப்படுத்தப்பட்ட சீரான வரிமுறை கொண்டு வரப்படும். மறைமுகவரி ஒழிக்கப்படும்.

### இ) கல்வி, குமுக, பண்பாட்டுத் துறையில்

1. தரகு முதலாளிய - பார்ப்பனிய மற்றும் மேலை வல்லரசியத்தின் பிற்போக்கு, சீரழிவுப் பண்பாடு முற்றாக ஒழிக்கப்பட்டு தமிழ்த் தேசத்தின் உயரிய பண்பாட்டு மரபுகள் பேணப்படும். தமிழ்த் தேசிய பாட்டாளி வகுப்பின் தேசிய, குடிநாயகப் பண்பாடு வளர்த்தெடுக்கப்படும்.

www.padippkam.com



2. மதவெறி தடை செய்யப்படும். கடவுள் நம்பிக்கை தனியாள் உரிமையாக்கப்படும். கடவுள், மதம் ஆகியவற்றின் பெயரால் சுரண்டுவதும், வல்லாண்மை செய்வதும் தடுக்கப்படும். தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியன தடை செய்யப்படும். சாதியக் குறியீடுகள் குறிப்பாக மேல்தட்டு சாதியக் குறியீடுகள் - பண்பாடுகள், தாழ்த்தப்பட்ட மக்களின் சேரி முறைகள் ஒழிக்கப்படும். அனைத்து அரங்கிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமநிலைக்கு உறுதி செய்யப்படும்.

3. இப்போதைய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் கல்வி முறையும் நிறுவனங்களும் ஒழிக்கப்படும். உழைப்புடன் இணைந்த தேசிய அறிவியல் கல்வி வழங்கப்படும். கல்வி நிறுவனங்கள் மீதான சாதி-மத வல்லாண்மை ஒழிக்கப்படும். தன்னாட்சி, தற்சார்பு, குடிநாயக தேசியப் பொருளியல், அரசியல், பண்பாடு ஆகியவற்றுக்கு உதவும் முகமாக கல்வி அமைக்கப்படும். எழுத்தறிவின்மை முற்றாக ஒழிக்கப்படும்.

4. தமிழ் மட்டுமே அனைத்து மட்டங்களிலும் கல்வி, ஆட்சி, ஞாயமன்றம், வழிபாடு முதலான அனைத்துத் துறைகளுக்கான மொழியாக்கப்படும். தமிழின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

5. மகளிர் உரிமை பாதுகாக்கப்படும். ஆண்களுக்கு நிகராக மகளிர் அனைத்துத் துறைகளிலும் திகழ உறுதி செய்யப்படும். மகளிரை இழிவுபடுத்துவது, உரிமை பறிப்பது, ஒடுக்குவது போன்றவை தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்படும்.

6. குழந்தைகள் மற்றும் முதியவர்களின் நலன்கள் முற்றாகப் பேணப்படும். ஊனமுற்றவர்கள் நலன் பாதுகாக்கப்படும். அனைத்து மக்களுக்கும் நல்வாழ்வும், மருத்துவ வாய்ப்புகளும் உறுதி செய்யப்படும்.

7. தமிழகத்தின், தமிழ் இனத்தின், தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்புகள் மீட்கப்படும். தமிழக வரலாறு சரியான முறையில் எழுதப்படும். தமிழ் அறிஞர்கள் போற்றப்படுவர். தமிழ் மருத்துவம், இசை, நாடகம் மற்றும் கலை, இலக்கியங்களும், விளையாட்டுகளும் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படும். தமிழ் அறிவியல் ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.



8. அனைத்துத் துறைகளிலும் சமக்கிருத - ஆங்கிலமயமாதல் ஒழிக்கப்பட்டு தமிழ் மீட்கப்படும்.

### ஈ) அயலுறவுத் துறையில்

1. வல்லரசியங்களுடனான இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசியத்தின் எல்லா உடன்பாடுகளும் நீக்கம் செய்யப்படும். மக்கள் பகை - தேசப் பகை அரசியல் கூட்டு உடன்பாடுகள் அனைத்தும் நீக்கம் செய்யப்படும்.

2. வல்லரசியங்களின் புதிய வன்குடி வல்லாண்மைக்கும், வல்லாண்மைப் போட்டிக்கும் எதிராக உறுதியாகப் போராடும் பிற நாடுகளுடன் சமதகுதியுடன் உறவை உறுதிப்படுத்தும்.

3. குமுகாய வேறுபாடுகள் பற்றிய கவலை இன்றி அனைத்து நாடுகளுடனும் அய்நெறிக் கொள்கைகளின் அடிப்படையில் உறவைப் பேணும். (அவையாவன: நாடுகளின் தன்னாட்சி - ஒருமைப்பாட்டை மதித்தல், பிற உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமை, நாடுகளிடையே சமநிலை பேணுதல், வலிந்து கைப்பற்றுதலை எதிர்த்தல், அமைதி இணை வாழ்வைப்பேணுதல்)

4. தேசிய விடுதலை இயக்கங்களுக்கும், மக்கள் குடிநாயக இயக்கங்களுக்கும், புரட்சி இயக்கங்களுக்கும் தனது உறுதியான ஆதரவை வழங்கும். அம்மக்களோடும், நாடுகளோடும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணும். நிறவெறி, இனவெறி, மதவெறி, மரபினவெறி, கொடுநெறி மற்றும் அனைத்து மக்கள் பகை ஆற்றல்களுக்கும் எதிராகப் போராடும். அயலக, புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நலன் பேணும்.

5. பாட்டாளி வகுப்பு உலகியம், மார்க்சிய-லெனினிய மெய்மம், தோழமைப் புரிந்துணர்வு, நல்லுதவி அடிப்படையில் பொதுமை இயக்கங்களுடனும், நாடுகளுடனும் நட்புறவைப் பேணும்.

## தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

68. தேசிய விடுதலைப் புரட்சிக்கு பாட்டாளி வகுப்பு தனது தலைமையை அதன் அரசியல் கட்சியான தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் வாயிலாக செலுத்தும்.

படிப்பகம்

www.padippkam.com



69. தேசிய விடுதலைப் புரட்சியை இறுதிவரை எடுத்துச் செல்ல எல்லாப் புரட்சி வகுப்புகளையும், பிற தேசப்பற்றும் வல்லரசிய எதிர்ப்புத் தன்மையும் கொண்ட தேசியக் குடிநாயக ஆற்றல்களையும் ஒன்றிணைத்து ஒரு தேசிய விடுதலை முன்னணியை தொழிலாளர்-உழவர் கூட்டை அடிப்படையாகக் கொண்டு பாட்டாளி வகுப்புத் தலைமையில் கட்சி கட்டும். தேசிய விடுதலை முன்னணி, புரட்சியின் தொடக்கத்திலிருந்தே "புரட்சி தேசிய அரசு" என்ற முழக்கத்துடன் கட்டப்படுகிற தேசிய இயக்கத்திலிருந்து, புரட்சிப் போராட்டங்களினூடே படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும். கட்சியும், முன்னணியும் இந்திய தரகு முதலாளிய -பார்ப்பனிய வல்லரசியத்துக்கு எதிராக எல்லா தேசிய இனங்களிலும் உள்ள புரட்சி குடிநாயக ஆற்றல்கள்-இயக்கங்களுடனும் தேசிய விடுதலை ஆற்றல்கள் - இயக்கங்களுடனும் இடைவிடாத தொடர்புகளைப் பேணும்.

70. தேசிய விடுதலைப் புரட்சி மூலம் ஒரு மக்கள் குடிநாயக அரசை நிறுவுவதற்கு பாட்டாளி வகுப்பு ஒரு தேசிய மக்கள் போரை நடத்தும். பரந்துபட்ட மக்களை ஒன்றுதிரட்டி அவர்களைச் சார்ந்து நின்று மக்கள் அரசியல் படையையும் அதிலிருந்து படைக்கலப் படையையும் கட்டுவதன் மூலமே இத்தகைய போரைத் தொடங்க முடியும்.

71. கட்சி, புரட்சியின் தேவையையொட்டி கமுக்கமான, வெளிப்படையான, சட்டப்பகையான, சட்டப்படியான முறைகளைத் தெளிவுணர்வுடன் பின்பற்றும்.

72. புரட்சியின் வெற்றிக்கு அரசியல் போராட்டத்தின் பங்கு முதன்மையானதும் முகமையானதும் ஆகும். அதே நேரத்தில் படைக்கலப் போராட்டத்தின் பங்கு முகமையானதும், தீர்மானமானதும் ஆகும். அரசியல் அணிதிரட்டலுக்கான அரசியல் போராட்டம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானதாக வளர்ச்சியடையும்போது படைக்கலப் போராட்டம் தொடங்கும். அது அரசியல் போராட்டத்துடன் கூடவே கொரில்லா பகுதி அமைப்பது, செந்தளப்பகுதி அமைப்பது, நாட்டின் அரசியல் அதிகாரம் முழுவதையும் கைப்பற்றி தேசத்தை விடுவித்து மக்கள் குடிநாயக அரசை நிறுவுவது என்ற முறையில் புரட்சிப் போர் தேசியவிடுதலைப் புரட்சியில் வெற்றி பெறும்வரையில் முன்னேறும். புரட்சியின் பாதை எண்ணற்ற ஏற்ற இறக்கங்களும், முன்னேற்றமும் பின்னடைவுகளும், நெளிவு சுழிவுகளும் கொண்டதாகவே இருக்கும்.



73. தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி தமிழ் நாடு விடுதலைப் புரட்சிக்கான இத் திட்டத்தை தமிழ் மக்கள் முன் வைத்து இந்த மாபெரும் விடுதலைப் புரட்சிக்கு தொண்டு செய்ய தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது. கட்சி பரந்துபட்ட மக்களுக்கு எல்லையற்ற வகையில் நேசத்துடனும் உண்மையுடனும் இருக்கும். அவர்களுக்குத் தொண்டு செய்யும். அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் திரள் பாதையையே கடைப்பிடிக்கும். தமிழ் மக்களின், உலக மக்களின் கடந்த கால, நிகழ்கால வளமான படிப்பினைகளை உட்செரித்து தமிழ்நாடு விடுதலைப் புரட்சியின் தேவைக்கேற்ப அவற்றை பருண்மையாக ஒருங்கிணைக்கும். முன்முயற்சி, தற்சார்பு, திறனாய்வு-தன்னாய்வு, குடிநாயக நடுவண்மை ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை உறுதியாகப் பற்றி நிற்கும்.

74. தமிழ் நாட்டில் ஒரு தேசிய விடுதலைப் புரட்சி மூலம் மக்கள் குடிநாயக அரசை நிறுவவும், அதன் படிப்படியான, திட்டமிட்ட அரசியல், பொருளியல் நடவடிக்கைகள் மூலம் தமிழ்க் குமுகாயம் ஒரு நிகரமையக் குமுகாயமாக வளரவும் பின்னர் முழுநிறைவாக நிகரமைய அமைப்பிலிருந்து பொதுமைய அமைப்பிற்கு வளரவும் த.நா.மா.லெ.கட்சி தலைமையேற்று இறுதி வரையிலும் தெளிவுணர்வுடன் வழிநடத்தும்.

75. தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி தமிழ்நாடு பாட்டாளி வகுப்பின் முன்னணிப் படையாகும். புரட்சியில் தமிழ் மக்களை வழிநடத்தும் அரசியல் கருக்குழுவாகும். அதே நேரத்தில் கட்சியானது உலகப் பாட்டாளி வகுப்பு போர்ப்படையில் ஓர் அணியாகும். தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி அதன் சிந்தனைக்கும் நடைமுறைக்குமான மெய்ம வழிகாட்டியாக மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை கொண்டிருக்கிறது. மா-லெ-மா சிந்தனையின் அனைத்தும் தழுவிய கோட்பாடுகளை புரட்சியின் பருண்மையான நிலைமைகளில் ஒன்றிணைக்க உறுதி கொண்டிருக்கிறது.

76. உலகில் உள்ள அனைத்து முரண்பாடுகளும் கூர்மை அடைகின்றன. புரட்சி, போர் இரண்டுக்குமான காரணங்கள் வளர்கின்றன. நாடுகள் தன்னாட்சியை விரும்புகின்றன. தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன. மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள். வரலாற்றில் இம் மாபெரும் போக்கு தவிர்க்க முடியாதவாறு முன்னோக்கிப் பாய்கிறது. அதே நேரத்தில் உலக வல்லரசியங்களின் உட்பகையும் போட்டியும் ஒருநாள் உலகப் போருக்கு இட்டுச்

படிப்பகம்

www.padippakam.com



செல்லும் வாய்ப்புக் கொண்டிருக்கிறது. போர், புரட்சிக்கு வழிவகுத்தாலும் சரி, புரட்சி, போரை தடுத்தாலும் சரி மாந்தகுலத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றவை மேல்நிலை வல்லரசியங்களல்ல; மாறாக, மேலும் மேலும் விழிப்புற்றுவரும் கோடிக்கணக்கான உலக மக்களேயாவர். உலகின் எதிர்காலம் ஒளிமயமாகவே இருக்கிறது.

77. இது லெனினியக் காலகட்டம், வல்லரசியமும் பாட்டாளி வகுப்புப் புரட்சியுமான காலகட்டம். இக்காலகட்டத்திலேயே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. மா-லெ-மா சிந்தனை உலகில் மாபெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறது. அனைத்து திரிபுகளையும் அது தோலுரித்து இருக்கிறது. உலக வல்லரசிய பிற்போக்காளர்களுடன், திரிபாளர்களும் அம்பலப்படுத்தப்பட்டு நிற்கிறார்கள்.

78. உலகின் பொதுமை இயக்கங்கள், நாடுகள், ஒடுக்கப்பட்ட நாடுகள் மக்களுடனான நமது மக்களின் ஒற்றுமை தமிழ்நாடு விடுதலைப் புரட்சிக்கு முழுமையான வெற்றியைக் கொண்டுவரும்; உலக வல்லரசியங்கள் மற்றும் அனைத்துப் பிற்போக்காளர்களின் அழிவையும் உலக நிகரைமையப் புரட்சியின் வெற்றியையும் விரைவுப்படுத்தும் என கட்சி உறுதியாக நம்புகிறது. வெற்றிக்கான அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.



## இணைப்பு

| அருந்தமிழ்ச் சொல் | வழக்குச் சொல் |
|---|---|
| அணியம் | தயார் |
| அமைதி இணைவாழ்வு | சமாதன சகவாழ்வு |
| அய்நெறி | பஞ்சசீலம் |
| ஆற்றல்கள் | சக்திகள் |
| உலகியம் | சர்வதேசியம் |
| ஒப்போலை | ஓட்டு, வாக்கு |
| ஒப்பிச்செல்லுதல் (இணக்கம்) | சமரசமாகச் செல்லுதல் |
| ஒற்றுமை முன்னணி | அய்க்கிய முன்னணி |
| ஒற்றுமை நாடுகள் பேரவை | அய்க்கிய நாடுகள் சபை |
| கமுக்கம் | இரகசியம் |
| குடிநாயகம் | ஜனநாயகம் |
| குமுக ஞாயம் | சமூக நீதி |
| குமுகாயம் | சமுதாயம் |
| கொள்கையியல் | சித்தாந்தம் |
| கொடுநெறி | பாசிசம் |
| செயலுத்தி | போர்த்தந்திரம் (Tactics) |
| தன்னாய்வு | சுயவிமர்சனம் |
| தன்னாட்சி | சுதந்திரம் |
| தன்னிலைத் தீர்வு | சுயநிர்ணயம் |
| தன்னிலைத் தீர்வுரிமை | சுயநிர்ணய உரிமை |
| தன் மதிப்பு | சுயமரியாதை |
| திரிபியம் | திரிபுவாதம் |
| திறனாய்வு | விமர்சனம் |
| தீவிரவியம் | தீவிரவாதம் |
| தெளிவுணர்வுடன் | உணர்வு பூர்வமாக |
| நடுவண் | மையம் |
| நடுவண்மை | மத்தியத்துவம் |

படிப்பகம்

www.padippkam.com

| அருந்தமிழ்ச் சொல் | வழக்குச் சொல் |
|---|---|
| நயன்மைக் கட்சி | நீதிக்கட்சி |
| நிகரமையம் | சோசலிசம் |
| நிலக்கிழாரியம் | நிலப்பிரபுத்துவம் |
| படைக்கலம் | ஆயுதம் |
| படையியம் | இராணுவ வாதம் |
| பகராளி | பிரதிநிதி |
| பரப்புரை | பிரச்சாரம் |
| புலம் பெயர்ந்தோர் | அகதிகள் |
| பேராயக் கட்சி | காங்கிரஸ் கட்சி |
| பொதுமையம் | கம்யூனிசம் |
| பொதுமை | கம்யூனிஸ்ட் |
| பொருளியல் | பொருளாதாரம் |
| பொருளியம் | பொருளாதார வாதம் |
| பொழுதமைவியம் | சந்தர்ப்பவாதம் |
| மாநிலத் தன்னாட்சி | மாநில சுயாட்சி |
| மூலவுத்தி | யுத்த தந்திரம் (Strategy) |
| மெய்மம் | தத்துவம் |
| வகுப்பு | வர்க்கம் |
| வரைவு | நகல் |
| வல்லரசியம் | ஏகாதிபத்தியம் |
| வல்லதிகாரம் | சர்வாதிகாரம் |
| வல்லாண்மை | ஆதிக்கம் |
| வல்லந்தம் | நிர்பந்தம் |
| வன்குடிநாடு | காலனிநாடு |
| விரிவாக்க வல்லாண்மை | விரிவாதிக்கம் |
| விளைப்பு | உற்பத்தி |

படிப்பகம்